# அகத்தியர் வைத்தியம் 300



பதிப்பாசிரியர்

முனைவர் **வே. இரா. மாதவன்**

பஜ 7185

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# அகத்தியர்

# வைத்தியம் - 300

# அகத்தியர் வைத்தியம் - 300

பதிப்பாசிரியர்

**முனைவர் வே.இரா. மாதவன்**

பேராசிரியர் & தலைவர்

ஓலைச்சுவடித்துறை

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர் - 613 010**

ISBN : 978-81-7090-391 - 8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 348

நூல் : அகத்தியர் வைத்தியம் - 300

பதிப்பாசிரியர் : முனைவர் வே.இரா. மாதவன்

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2040, ஐப்பசி
முதற்பதிப்பு - அக்டோபர் 2009

பக்கம் : 140 + 4

அளவு : டெம்மி 1/8

தாள் : டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ

படிகள் : 1200

விலை : உரூ. 70.00

ஒளியச்சு : முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,
தெற்கு வீதி, தஞ்சாவூர்.

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக
மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

**வை. கண்ணபுரக்கண்ணன்**
எம்.ஏ.,பி.எட்.,எம்.ஃபில்.,
இயக்குநர் (பொ)
பதிப்புத்துறை

அரண்மனை வளாகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 001.

## பதிப்புரை

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். வருமுன் காத்தலும் வந்தபின் நீக்கலும் இதற்குத் துணைசெய்யும். நம் முன்னோர் இதுபற்றி மிகுதியும் கூறியுள்ளனர். இன்று நேற்று அல்ல; மிகப் பழங்காலத்திலேயே தமிழகம் மருத்துவத் துறையில் தலைசிறந்து விளங்கியிருக்கிறது.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவப் பெருந்தகை அளித்த மருத்துவத்துறைப் பாடம். இதில் எத்தனை நாடிகள்! மருத்துவத் துறையின் உயிர் நாடியாகிய 'நாடி'யையே வைத்துச் சொல்லோவியம் தீட்டியிருக்கும் வள்ளுவப் பெருந்தகையின் மதிநுட்பம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. நம் முன்னோர் கையாண்ட மருத்துவ முறைமைகள் ஓலைச்சுவடிகளாய் உயிர் வாழ்ந்து வருகின்றன. அவற்றை நூல்களாக்கி அனைவருக்கும் பயன் பரப்பும் அரிய பணியைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆற்றி வருகிறது. அவ்வகையில் இப்போது இந்நூல். 'அகத்தியர் வைத்தியம் - 300' எனும் இந்நூலில் பல்வகை மருந்துகள், செய்ம்முறைகள், பயன்படுத்தும் முறைகள், தீரும் நோய்கள் முதலியன பற்றிய அரிய செய்திகள் பாடல்களாக இடம்பெற்றுள்ளன. மருந்துப் பொருள்கள், நோய்ப் பெயர்கள் (தமிழ் - ஆங்கிலம்), பாடல் முதற்குறிப்பு, அருஞ்சொற்கள் ஆகியவற்றிற்குரிய அகர வரிசை பாடல் எண்ணுடன் பின்னிணைப்பாகத்

தரப்பட்டுள்ளது நூலிற்கு மேலும் அழகு சேர்க்கிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் பதிப்பித்து வெளியிடப்படும் இதுபோன்ற நூல்கள் மருத்துவர்களுக்கும், ஆய்வாளர் களுக்கும், மருத்துவத்துறை மாணவர்களுக்கும், மக்கள் நல்வாழ்விற்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் வெளியிடப்பட அனைத்து வகையிலும் துணைநின்று ஆற்றுப்படுத்திய மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. **இராசேந்திரன்** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பதிப்பாசிரியர் முனைவர் வே.இரா. மாதவன், கணினியச்சு செய்தளித்த முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. வை. இராமமூர்த்தி, அட்டைப்பட வடிவாக்கம் தந்த திரு. சௌத்திரி, பதிப்புத்துறை - அச்சகப் பணியாளர்கள் ஆகியோருக்கும் நன்றியுடையேன்.

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| பதிப்பாசிரியர் உரை | *1* |
| பொருள் அட்டவணை | *15* |
| அகத்தியர் வைத்தியம் - 300 | *19* |
| பின்னிணைப்புகள் | |
| மருந்துப் பொருள்கள் அகர வரிசை | *107* |
| நோய்ப்பெயர்கள் அகர வரிசை | *121* |
| பாடல் முதற்குறிப்பு அகர வரிசை | *127* |
| அருஞ்சொற்கள் அகர வரிசை | *133* |

# பதிப்பாசிரியர் உரை

தமிழ் மொழியின் தொன்மையினையும் வளத்தையும் விளக்குவன தமிழ்நூல்கள். பழந்தமிழ் இலக்கியம், இலக்கணம், நுண்கலைகள், மருத்துவம் போன்ற பல இயல்களை விளக்கும் தமிழ்நூல்கள் பல பல்லாண்டுகளாக ஓலைச்சுவடிகளிலேயே எழுதிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. இவற்றுள் இன்னும் அச்சில் வராத நூல்களும் உள. இவ்வாறு அச்சாகாத சுவடிக்ளைப் பதிப்பித்து அச்சில் வெளியிடுவதும், பல ஆண்டுகளுக்கு முன்பு அச்சிட்டு இன்று கிடைக்காதவற்றை மீண்டும் ஆய்ந்து பதிப்பித்து வெளியிடுவதும் எதிர்காலத் தேவையாக உள்ளன. இப்பணிகளைத் தமிழ்ப்பல்க்லைக்கழக ஓலைச்சுவடித்துறை செய்து வருகின்றது. இவ்வரும்பணியின் ஒரு பகுதியே தமிழ் மருத்துவச் சுவடிகள் செம்பதிப்புப் பணியாகும்.

உலகின் பழமையான மருத்துவ முறைகளில் குறிப்பிடத் தக்கது தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவம். இது ஓர் இயற்கை மருத்துவமாகும். பல்லாண்டுகளுக்கு முன்பே இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்ட பழந்தமிழர்கள் உடல் காக்கும் மருந்து செய்முறைகளையும் மருந்துப் பொருள்களையும்

தம் சுற்றுச்சூழலிலிருந்தே பெற்றுப் பயனாக்கி வந்துள்ளதை அறிகிறோம்.

மக்கள் நலம் காக்கும் தமிழ் மருத்துவத்தில் சிறந்திருந்த நம் முன்னோர்கள் இம்மருத்துவ முறைகளைப் பிற்காலத்தில் பலரும் பயன்படுத்த வேண்டும் என்னும் நோக்கில் இவைபற்றிய செய்திகளை ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்துப் பாதுகாத்து வந்துள்ளனர். இன்று கிடைக்கும் தமிழ் ஓலைச்சுவடிகளில் மிகுதியான எண்ணிக்கையில் உள்ளவை மருத்துவம் தொடர் பானவையே. மக்களின் நலவாழ்விற்கு மிகவும் தேவையான இவற்றுள் பல இன்னும் அச்சாகவில்லை. சுமார் நூறு ஆண்டு களுக்கு முன்பு அச்சிட்ட சில நூல்களில் பிழைகள் மலிந்தும் காணப்படுகின்றன. சுவடிகளிலுள்ள வடிவங்களை அப்படியே அச்சிலும் வெளியிட்டுள்ளதால் இவற்றைப் பயன்படுத்துவதிலும் பல சிக்கல்கள் உள்ளன.

தமிழ் மருத்துவத்தின் தனிச்சிறப்பைப் பல்துறை அறிஞர் களும், அறிவியலாரும், பொதுமக்களும் நன்கு அறியவேண்டு மாயின் பல தமிழ் மருத்துவச்சுவடிகள் நன்முறையில் செம்பதிப்பாக அச்சில் வெளியிடப் பெற வேண்டும். இத்தகைய பெருநோக்கில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையின் வழி வெளிவரும் செம்பதிப்புகள் இவண் குறிப்பிடத்தக்கன. தமிழ் மருத்துவச் சுவடிகள் பதிப்பு வரிசையில், அகத்தியர் வைத்திய காவியம் 1500, வைத்திய சிந்தாமணி, தன்வந்தரி வைத்தியக் கும்மி 300, நோயும் மருந்தும் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன. இவை, பலராலும் போற்றப்பட்டு பயன்பாட்டிலுள்ளன. இவற்றைத் தொடர்ந்து ஓலைச்சுவடியிலிருந்து 'அகத்தியர் வைத்தியம் 300' என்னும் இந்நூல் பதிப்பித்து வழங்கப் பெறுகிறது.

## சித்தர்கள்

சித்து என்னும் சொல், தெளிந்த ஞானத்தைக் குறிக்கும். ஞானம் பெற்றவர்கள் சித்தர்கள் என அழைக்கப் பெறுவர். சித்தி பெறுதல் என்பது யோக நிலைகளில் மிக உயர்ந்த நிலையாகும்.

உலக வாழ்க்கையில் ஞானி, யோகி, ரிஷி, முனி, குரு எனப் பலவாறு சித்தர்கள் அழைக்கப்பெறுவர். ஆயினும், இவர்களிலிருந்து சற்று வேறுபட்டவராகவே சித்தர்கள் தோன்றுகின்றனர். சித்தர்கள் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவர்கள். அவர்கள், சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்தவர்கள். நாடு, இனம், மொழி ஆகிய எல்லைகளைக் கடந்தவர்கள் சித்தர்கள். உலகெங்கும் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் தோன்றி, மக்களின் நல் வாழ்வு ஒன்றை மட்டுமே போதிப்பவர்கள் சித்தர்கள். இவர்களுக்கு எம்மதமும் சம்மதம். தாம் ஆத்ம சக்தியால் பெற்ற பயன்களைப் பாமர மக்களும் பெறவேண்டும் என்னும் அவாவினை உடையவர்கள் சித்தர்கள்.

மனித வாழ்வு மிக உயரியது என்று கருதும் சித்தர்கள் உடம்பைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் நோக்கில் மருத்துவ நூல்கள் பலவற்றை எழுதி வைத்துள்ளனர்.

சித்தர்கள் பாடல்கள் பல எளிய நடையில் அமைந்தவை. பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளத் தக்கவை. இனிய ஓசையில், எளிய யாப்பில் பாடப் பெற்றவை. மக்கள் பேசும் கொச்சை மொழியும் வட்டார வழக்குச் சொற்களும் சித்தர் பாடல்களில் இடம்பெறக் காணலாம்.

சித்தர்கள் பெயரில் வழங்கும் நூல்கள் யாவும் அவர்களாலேயே எழுதப் பெற்றவை என்று கூறுவதற்கில்லை. சித்தர்கள் வாய்மொழியாகக் கூறியவற்றை ஏட்டில் எழுதியவர்கள் அவர் வழிவந்தவர்கள் என்பதே உண்மையாகும். எனவே, இத்தகைய ஏடுகளில் எழுத்துப் பிழைகள், யாப்பு மாறுபாடுகள்

போன்றவை மலிந்திருப்பது இயல்பு. இவற்றால் சித்தர்களைக் குறை கூற வேண்டிய தேவையுமில்லை. ஏடு எழுதியோர் செய்த பிழை என்றே இவற்றைக் கருத வேண்டும். இந்நிலையில் நோக்க, இந்நூல்களின் செம்மையான வடிவத்தைக் காண்பதும், அவ்வாறு கிடைக்கும் திருந்திய வடிவத்தை அச்சிட்டு வழங்குவதும் இன்றைய தேவையாகின்றன. இந்நூல்களை அழியாமல் பாதுகாப்பதும், இவற்றிலுள்ள அறிவியல் தொடர்பான செய்திகளை இனங்காண்பதும் ஆய்விற்குப் பயன் நல்குவனவாம்.

**அகத்தியர்**

அகத்தியர் என்ற பெயர் கொண்ட புலவர்களும், முனிவர்களும், சித்தர்களும், மருத்துவர்களும், சாதாரண மக்களும் பலராவர். இவர்கள் பல்வேறு காலத்தையும் இனத்தையும் சார்ந்தவர்கள் ஆவர்.

அகத்திய முனிவரைப் பற்றிய பல செய்திகள் புராணங்களிலும் இதிகாசங்களிலும் பலவாறு கூறப்பெறுகின்றன.

தமிழ்மொழிக்கு முதன்முதலாக அகத்தியம் என்னும் இலக்கண நூலைச் செய்த அகத்தியரும், காலக்கணிதம், மருத்துவம் போன்றவற்றைச் செய்த அகத்தியரும், பிறரும் வெவ்வேறானவர்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

அகத்திய முனிவர் என்னும் தலைப்பில் 41 அகத்தியர் பற்றி அபிதான சிந்தாமணி விளக்குகிறது.

பதினெண் சித்தர்களில் முதன்மையானவராகக் கூறப் பெறும் அகத்தியர் பல காலக்கட்டங்களில் வாழ்ந்தவர் என்றும் பல்வேறு துறைகள் பற்றிய நூல்களை எழுதியவர் என்றும் பலரும் குறிப்பிடுகின்றனர். அவரவர் மனப்போக்கிற்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்ப இவரைப் பற்றிய வரலாறுகள் விரித்துரைக்கப் பெறுகின்றன.

அகத்தியர் ஒருவர் அல்லர் என்றும் பல்வேறு காலங்களில் அகத்தியர் பெயரால் பலரும் இருந்தனர் என்பதும் இவண் அறியத் தக்கதாகும்.

தமிழ் மருத்துவத்துறையில் அகத்தியர் பெயரால் வழங்கும் நூல்களே மிகுதியாக உள்ளன. பலபெருநூல்களும், சிறிய நூல்களும் இவர் எழுதிய நூல்களாகக் கூறப்பெறுகின்றன. அகத்தியர் பெயரால் வழங்கும் இத்தகைய நூல்களில் பல பிற்காலத்தில் பலரால் எழுதப்பெற்ற நூல்களே என்று சித்த மருத்துவ ஆய்வறிஞர் திரு.இரா. தியாகராசன் அவர்கள் (கலைக் களஞ்சியம், தொகுதி - 8) கூறுவர். இவற்றின் அடிப்படையில் இன்று கிடைக்கும் பழைய நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் கருதலாம்.

**வைத்தியம்**

வையகத்தாருக்கு வேண்டப்படும் நுகர்ச்சிப் பொருள் களை அவரவர் உடல்நிலைக்கு ஏற்றபடி கூறும் நூல் வைத்தியம் என்று அழைக்கப் பெறும். இத்தகைய நூலாராய்ச்சியில் வல்லவரே வைத்தியர் என்று அழைக்கப் பெறுவர்.

வைத்தியம் என்ற சொல், பரிகாரம் அல்லது நீக்குகை என்ற பொருளில் வரும். (பரிகரித்தல், காத்தல், குணமாக்கல், நீக்கல்). இவ்வாறே வைத்தியன் என்பது பண்டிதன், பரிகாரி என்ற பொருளிலேயே வழங்கப் பெறுகிறது. எல்லா நோய்களையும் தீர்க்கும் இறைவனை வைத்தியநாதன் என்றே அழைப்பர்.

தமிழில் மருத்துவம் என்னும் சொல்லுக்கு இணையாக வைத்தியம், வாகடம் ஆகிய சொற்களை வழங்கும் மரபைப் பல நூல்களில் காண்கிறோம். பழைய ஓலைச்சுவடிகளிலும் இவ் வழக்கைக் காணலாம்.

**300**

தமிழ் மருத்துவ நூல்களை விளக்கும் ஓலைச்சுவடிகளில் அந்நூற்பெயர்களை நூல் ஆசிரியர் பெயர்களுடன் சேர்த்து வழங்குவது மரபு. (எ.டு. அகத்தியர் வைத்தியம், தேரையர் வைத்தியம், போகர் வைத்தியம்). இவ்வாறே, குறிப்பிட்ட நூலிலுள்ள பாடல் எண்ணிக்கையைக் குறிப்பிட்டும் நூற்பெயர்கள் அமைகின்றன. (எ.டு. அகத்தியர் வைத்திய காவியம் 1500, போகர் 700, அகத்தியர் வைத்தியம் 108, அகத்தியர் வைத்தியம் 205 முதலியன) இவ்வாறு பல சுவடிகளில் கூறக் காணலாம்.

இவ்வகையில், இந்த நூலில் 300 விருத்தப்பாக்கள் உள்ளமையால் இதற்கு அகத்தியர் வைத்தியம் 300 என்று பெயரிட்டுள்ளனர்.

**சுவடி பற்றிய செய்திகள்**

அகத்தியர் வைத்திய சூத்திரம் 300 என்ற பெயரில், தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் மூன்று சுவடிகள் உள்ளன. (சு.எண்: 35: 2288 – 2: 2447). இவற்றுள், சு. எண்: 35 இல் உள்ள சுவடி, முழுமையாக உள்ளமையால் இதனை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சுவடியில் 110 ஏடுகள் உள்ளன. சுவடியின் நீளம் 27.5 செ.மீ., அகலம் 3 செ.மீ., ஆகும். ஏடுகளின் இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளன. மற்ற இரண்டு சுவடிகளும் ஒப்பு நோக்கப்பட்டன.

அகத்தியர் வைத்தியம் 300 என்பது நூலின் பாடல் எண்ணிக்கையைக் குறிப்பதால், இதனை நூலின் பெயராகக் கொள்வதும் பொருத்தமுடையதாகின்றது.

மேற்கூறப்பட்ட மூன்று சுவடிகளிலும் ஏடுகளின் இடது பக்க ஓரங்களில் ஏட்டு எண்ணும் உட்தலைப்புகளும் எழுதப்பட்டுள்ளன. ஏட்டெண், பாடல் எண் போன்றவை தமிழ் எண்களாலேயே குறிக்கப்பட்டுள்ளன.

ஏடுகளில் தெளிவான எழுத்துக்கள் இருப்பினும், கிறுக்கலான கையெழுத்துக்களால் பல இடங்களில் மயக்கங்கள் தருகின்றன. பொதுவாக, மெய்யெழுத்துகளுக்குப் புள்ளிகள் இல்லை. ஒற்றைக் கொம்பு (எ), இரட்டைக்கொம்பு (ே) ஆகியன ஒன்றுபோலவே (எ) எழுதப்பட்டுள்ளன. மேலும், ா, ர இவற்றிற் கான வேறுபாடுகள் இல்லை. இரண்டும் 'ா' எனவே எழுதப்பட் டுள்ளன. க,ச;க,த; ப, ம; ய,ப போன்றவை தம்முள் மயக்கம் தருவனவாக எழுதப் பெற்றுள்ளன.

ஏடுகளை எழுதியவரின் கவனக்குறைவு, விரைவு, பேச்சு வழக்கு போன்ற பல காரணங்களால் இச்சுவடிகளில் பிழைகள் பல மலிந்துள்ளன. இவற்றை ஒப்பிட்டு அறிந்து, இடத்திற்கேற்ற வாறும், பொருளுக்கேற்றவாறும் திருத்தம் செய்து பதிப்பிக்க வேண்டியுள்ளன.

ஏடுகளிலுள்ள ஒவ்வொரு வரியிலும் பிழைகள் மிகுதியாக உள்ளமையால் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. மேலும், பாடல்கள் யாவும் அசை, சீர், அடி என்னும் வேறுபாடுகள் இல்லா மல் உரைநடை போன்று ஒரே தொடர்ச்சியாக எழுதப் பெற்றுள் ளமையால் இவற்றையும் பிரித்தறிந்து பதிப்பிக்க வேண்டியுள்ளன. இந்நூலிலுள்ள 301 பாடல்களும் விருத்தப் பாக்கள் ஆகும். இவை பல்வேறு காலங்களில் வழக்கில் இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகின்றது. பலகாலமாகப் பலரும் இவற்றைப் பயன்படுத்தி வந்திருக்க வேண்டுமெனவும் தெரிகின்றது. அகத்தியர் செந்தூரம் 300 என்ற பெயரிலும் இந்நூலிலுள்ள பாடல் போன்றே வழங்கி யிருப்பதாகவும் தெரிகின்றது.

**காலம்**

சுவடிகளில் காலக்குறிப்பு எதுவும் எழுதப்படவில்லை. எழுத்துக்களின் தன்மை, சுவடியின் வடிவம் இவற்றை வைத்து நோக்குமிடத்து, இவை இருநூறு அல்லது இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது.

பலவிதமான நோய்களுக்கான பல்வேறு மருந்து செய்முறைகளும் இந்நூலில் தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளன.

**மருந்து செய்முறைகள்**

தமிழிலுள்ள சித்த மருந்து செய்முறைகள் பல நூற்றாண்டுகளாகப் பழக்கத்தில் உள்ளவை. இவற்றை இன்றைய அறிவியலாரும் ஒப்புக் கொள்கின்றனர்.

சித்த மருந்து செய்முறைகள் சிறந்த வேதியியல் முறைகளைக் கொண்டதாகும். தாவரங்கள் (Vegetables), தாதுப் பொருட்கள் (Minearls), உலோகங்கள் (Metals), நடமாடும் உயிரினங்கள் (Animals) ஆகிய நான்கு வகை மூலப்பொருட்களிலிருந்தும் சித்த மருந்து செய்முறைகள் அமைகின்றன.

சித்த மருந்து செய்முறையில் புடமிடும் வகையில் உப்பு, சுண்ணம், சிந்தூரம், பற்பம் ஆகியவற்றைச் சில தலைமுறைகள் வரையிலும் மருந்து ஆற்றல் குறையாமல் பயன்படுத்த முடியும். சில மருந்துகளை வெவ்வேறு துணை மருந்துகளில் கூட்டிக் கொடுக்க வெவ்வேறு நோய்கள் தீரும் என்பதும் இம்மருந்துகளின் தனிச்சிறப்பாகும். இத்தகைய மருந்துகளின் குணங்களை அறிந்திருப்பதும், நோய்களுக்கேற்ற மருந்துகளைத் தரும் ம்ருந்தியலும் சித்த மருத்துவத்தில் காணும் அடிப்படைச் சிறப்பு நெறிகளாகும். இவற்றையே பதார்த்தகுணம் (Pharmacognosy), மருந்தாளுகை (Pharmacy), மருந்தியல் (Pharmocology) என இக்கால மருத்துவத்திலும் வழங்குகின்றனர்.

தமிழ் மருத்துவத்தில் மருந்துகளை 64 வகைகளாகக் கூறுவர். நோய்களுக்கேற்றவாறு உடலினுள்ளே செலுத்தத் தக்க மருந்துகள் (அக மருந்துகள்) 32 என்றும். உடலுக்கு வெளியில் இடும் மருந்துகள் (புற மருந்துகள்) 32 என்றும் வகைப்படுத்துகின்றனர்.

### அக மருந்துகள் 32

1. அடை, 2. இளகம், (அ) இலேகியம், 3. உட்களி, 4. உருக்கு, 5. எண்ணெய், 6. கட்டு (மாத்திரை), 7. கடுகு, 8.களங்கு, 9. கற்கம், 10. கற்பம், 11. குடிநீர், 12. குருகுளிகை, 13. குழம்பு, 14. சத்து, 15. சாறு, 16. சூரணம், 21. தீநீர், 22.தேனூறல், 23. நீறு, வெண்ணீறு (அ) பற்பம், 24. நெய், 25. பக்குவம், 26. பதங்கம், 27. பிட்டு, 28. மணப்பாகு, 29.மாத்திரை, 30. மெழுகு, 31. வடகம், 32. வெண்ணெய்.

### புற மருந்துகள் 32

1. அட்டை விடல், 2. அறுவை, 3. உறிஞ்சல், 4. ஊதல், 5. ஒற்றடம், 6. கட்டுதல், 7. கலிக்கம், 8. களி, 9. களிம்பு, 10. காரம், 11. கீறல், 12. குருதிவாங்கல், 13. கொம்பு கட்டல், 14. சலாகை, 15. சீலை, 16. சுட்டிகை, 17. தொக்கணம், 18.நசியம், 19. நாசிகா பரணம், 20.நீர், 21. பசை, 22. பொடி, 23. பீச்சு, 24. புகை, 25.பூச்சு, 26. பொட்டணம், 27. பொடி, 28.பொடி திமிர்தல், 29. முறிச்சல், 30. மை, 31. வர்த்தி, 32. வேது.

மேற்கூறப்பட்ட 64 மருந்து செய்முறைகள் தனித்தனியே விளக்குவதற்குரியன.

அகத்தியர் வைத்தியம் 300 என்னும் இந்நூலில், முதலில் உயிர்களின் பிறப்பு, ஆண் பெண் சேர்க்கை, நோய்களின் தோற்றம் பற்றி முறையாகக் கூறப்படுகின்றன. சிந்தூரம், கற்பம், இலேகியம், சூரணம், கிருதம், தைலம் போன்றவை கூறப்படுகின்றன.

### பாடப்பட்டுள்ள முறை

இந்நூலில் பாடல்கள் தொடர்ச்சியாக அந்தாதி அமைப்பில் எழுதப்பட்டுள்ளன. இவை எளிய நடையில் அமைந்துள்ளன.

நூலிலுள்ள பாடல்களுக்கான உரைவிளக்கங்கள் சுவடியில் இல்லை.

பெரும்பாலான பாடல்கள் முன்னால் உள்ள மருத்துவரை விளித்துப் பாடுவதாகவே அமைந்துள்ளன.

நோய்களை விளக்குமிடத்தும், மருந்து செய்முறையில் சில பக்குவங்களைக் கூறுமிடத்தும், நோய்களிலுள்ள விதங்களை கூறுமிடத்தும் உவமையுடன் விளக்குவதையும் இந்நூலில் காணலாம்.
காட்டாக,

**தடையறவே புலிபோலே தாக்கும் பாரே - 34**
**ஆடப்பா சுருக்கட்டைப் போலே சூதம் - 39**
**வளமான வெண்கலம் போலத் தகரும் பாரே - 46**
**பரிவான பொன்னிறம்போல் ஈயமாகும் - 47**
**சேரப்பா கர்ப்பத்தால் வந்த தோடம்**
**தீருமடா நோய்களெல்லா மெப்படிதா னென்றால்**
**மேரப்பா பருவதம்போல் பஞ்சு வைத்து**
**மிளகுபோல் தீயைவைத்த கதைபோ லாமே - 47**

என அமையும் பாடலடிகளை நோக்கலாம்.

## மருந்துகளின் சிறப்பு, துணை மருந்துகள், பத்தியம் போன்றன

இந்நூலில் மருந்துகளின் சிறப்பினையும், அவற்றை உரிய துணை மருந்துகளுடன் கலந்து தருவது குறித்தும், பத்தியம் போன்றவற்றையும் அங்காங்கே குறிப்பிடக் காணலாம். இவை, இந்நூலின் சிறப்பையும் பெருமையையும் விளக்குவனவாம். அவற்றுள் சிலவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் காணலாம்.

**சிந்தூரந் தின்பவர்க்குச் சித்தி யப்பா**
**தேகத்தில் வியாதியெல்லாஞ் சிதறிப் போக**
**சிந்தூரங் குன்றியெடை மூதண் டத்தின்**
**திறமான லேகியத்தில் பொதிந்து தின்னே. - 18**

உன்னவே மண்டலங்கொள் வயது கண்டு
உத்தமனே நோயென்ற தெல்லாம் போகும் - 19

பத்தியமாம் புகையிலையும் புளியுந் தானே - 20

பேரப்பா கேட்டுடனே எமதூ தர்கள்
பேசாதே ஓடுவர்காண் பின்பா ராரே - 22

அளவற்ற நோய்களுமே அகன்று போமே - 41

கருப்பான பசுவின்பால் தன்னிற் கொள்ளு
கண்முழித்து மூடுமுன்னே பிணமும் பேசும் - 51

காமடா நிமிளையங்கே கண்ணாற் பார்த்தால்
கட்டோடே கடல்புக்கும் கதியில் லாதே - 52.

ஒழித்திடவே முன்சொன்ன பற்பங் கூட்டி
உண்ணவே மண்டலந்தான் புளியா காது
சழிப்பான புகையிலையும் வழுதலங் காயும்
தான்விட்டுப் பாலுப்பைச் சற்றே கூட்டே - 65

சாய்ந்ததொரு அருணனைப்போற் சிந்தூ ரந்தான்
சாதிக்க எதிராளி எதிர்க்க மாட்டான் - 71

இவ்வகைதான் பத்துநாள் கொள்ளும் போது
எமனாலும் வெல்லரிது தேகந் தானே - 94

கரைதடுக்க வொட்டாது கடலே புக்கும்
கைகண்ட சிந்தூரரங் கண்டு கொள்ளே - 103

கண்டவுடன் பாண்டங்கே பறந்த தப்பா
காயங்கள் வெளுத்திருந்த தெங்கே போச்சு
கொண்டவுடன் புளியோடு புகையிலையு மாகா
கூடுகின்ற பெண்ணாகா உளுந்து மாகா
பண்டுடைய பத்தியத்தை விட்டா னாகில்
படுபாவி லேகியசிந் தூரந் தானே
சண்டமாரு தம்போலே மெய்ப முத்து
சண்ணுமடா மாற்றுமருந்து யில்லை தானே - 108

பதித்திருந்த வாதநீர்ப் பாண்டா னாலும்
பறக்குமடா பறக்குமடா பாண்டெல் லாமே - 111

காட்டவே சிந்தூரங் கண்ட போதிற்
காணப்பா நடுநடுங்கி யோடுந் தானே - 117

கனகம்போ லுறைந்திருந்த நோய்க ளெல்லாம்
காணாதே கடல்புக்குங் கருத்துள் ளோர்க்கே - 141

நாட்டுவாய் சந்திரோதை யத்தைக் கண்டால்
நடுநடுங்கி நோயெல்லாங் கண்கா ணாதே - 198

போச்சுடா நோயென்ற நோய்க ளெல்லாம்
புக்குமடா கடலங்கே கானமெங்கே யென்று - 203

முறிந்துவிடும் ஆனந்த வயிரவனைக் கண்டால்
மோசமடா வென்றுசொல்லி
நோய்களெல்லாம் முறிந்துபோம் - 211

பேரப்பா வயிரமென்று கேட்கு முன்பே
பின்திரும்பிப் பாராமற் பிரிந்து போமே - 219

அளவற்ற நோயெல்லா மகன்று போமே - 235

சாற்றினாலே யரைத்துச்சேர் பயற்றின் மட்டாய்
தவறாம லுண்டைடெய்து ரவியிற் போடு
கூற்றுவனார் தேசம்விட்டு தேசம் போவார்
கூறான பூபதிதான் காயக் கண்டு
தேற்றுவார் தேசத்து மானிடர்கள்
தேகமினிப் பலத்ததென்பார் திடங்கொண் டேதான்
மாற்றினார் வியாதியெல்லாம் சித்த ரப்பா
மகத்தான பூபதியை வணங்கிச் செய்யே - 241

ஒழிந்துதான் போச்சுதடா உண்மை தானே - 268

என இவ்வாறு இந்நூலின் பெருமைகளை நூலாசிரியர் விரிவாக விளக்குமிடங்கள் குறிப்பிடத்தக்கன.

இலிங்கப்புற்று, கடிதடப்புற்று, காற்புற்று, யோனிப்புற்று, காமாலை, குட்டம், குன்மம், சயம், சூலை, நெஞ்சுவலி, மகோதரம், மூலம், மேகம், வாதம், வெட்டை போன்ற பல்வேறு நோய்களுக் கான பல மருந்துகளை இந்நூலில் கூறக் காண்கிறோம்.

## மருத்துவர் தகுதியும் கவனமும்

நோய் நாடி, நோய் முதல் நாடி, அதைப் போக்கத் தேவை யான மருந்தை அறிந்து, அவற்றின் அளவறிந்து, உடல்நிலை அறிந்து, முறைப்படியே மருந்து தயாரித்து அளிப்பவரே தகுதி பெற்ற மருத்துவர் ஆவார். நோயுற்றவரின் துன்பம் போக்குவதில் மருத்துவர் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும்.

சித்த மருந்து செய்முறைகளில், மருந்துப் பொருள்களின் சுத்தி முறைகள் மிகவும் குறிப்பிடத்தக்கன. இந்நூலில் கூறப்பட் டுள்ள அளவு முறைகள் யாவும் பழைய அளவுமுறைகள் ஆகும்.

இவற்றிற்குரிய புதிய அளவுமுறைகளைக் கண்டறிந்து பயன் படுத்துவது பொருத்தமானதாகும்.

தமிழ் மருந்து செய்முறைகளில் நல்ல பயிற்சி உடைய வர்கள், அனுபவ மருத்துவர்கள், சித்த மருத்துவம் பயிலும் மாணாக்கர்கள், ஆய்வாளர்கள் ஆகியோருக்கு இந்நூல் மிகவும் பயனுடையதாகும்.

**- பதிப்பாசிரியர்**

# பொருள் அட்டவணை

### (எண்கள்: பாடல் எண்கள்)


அண்டச் சுண்ணம் – 153 – 159
அண்டபற்பம் – 67 – 72
அப்பிரகச் சத்து – 35 – 43
அயகாந்தச் சத்து – 14, 15
அயச் சத்து – 11 – 13
அயச்சிந்தூரம் – 134 – 138
அரப்பொடி சிந்தூரம் – 102, 103
ஆனந்த வயிரவன் – 208 – 211
உளுந்து வடை – 176
கஞ்சா சூரணம் – 183, 184
கந்தக ரசாயனம் – 112, 113
கந்திஅய பற்பம் – 228
கர்ப்பூர சிலாசத்து – 31, 32
கருநாகக் சிந்தூரம் – 95 – 97
காந்த ஈயம் – 9, 10
காந்த சத்து – 6 – 8
காந்த சிந்தூரம் – 229
காந்தமணி சிந்தூரம் – 255 – 260

காரியச் சிந்தூரம் – 185 – 192
கிருட்டிண அப்பிரகச் சிந்தூரம் – 77 – 83
குட்டத்துக்கு லேகியம் – 60 – 66
குருபூநீறு – 160 – 168
சயத்துக்கு லேகியம் – 73 – 76
சரக்கு சுத்தி – 251 – 254
சவுரித் தைலம் – 266 – 268
சீந்தி சர்க்கரை – 84– 88
சூத பற்பம் – 57 – 59
சூத பற்பம் – 212 – 215
தளமுறு சிந்தூரம் – 17 – 33
தாமிரச் சிந்தூரம் – 120 – 124
தாளக சலம் – 118, 119
தாளக பற்பம் – 55, 56
துய்யான் சிந்தூரம் – 232 – 234
துருசு சிந்தூரம் – 100, 101
துளசி லேகியம் – 173 – 175
நவசிந்தாமணி லேகியம் – 125 – 133
நவலோகச் சிந்தூரம் – 235, 236
நாக சிந்தூரம் – 178 – 181
நாக பற்ப சிந்தூரம் – 242 – 250
நிமிளைச் சத்து – 44 – 54
நூல்தொகை – 24 – 30
பஞ்சலோக சிந்தூரம் – 223 – 227
பாண்டுக்கு லேகியம் – 104 – 108
பூரண சந்திரோதயம் – 193 – 203
பூரண சுயமாக்கினி குமாரன் – 204 – 207
பேதிக்கு லேகியம் – 220 – 222
மகாராச பூபதி – 237 – 241
மண்டூரச் சிந்தூரம் – 230, 231
மண்டூரச் சிந்தூரம் லேகியம் – 109 – 111
முத்துமணிச் சிந்தூரம் – 116, 117

மேக சலத்துக்கு லேகியம் – 89 – 94
வயிர பற்பம் – 216 – 219
வழலைக்கு விவரம் – 146 – 152
வாதத்துக்குத் தைலம், எண்ணெய், நெய் – 261 – 265
வாதத் தெண்ணெய் – 269
வாலைரச சிந்தூரம் – 169 – 172
வாலை ரசம் – 16
வீரரச அயச் சிந்தூரம் – 98, 99
வெடி பிளந்த காலுக்கு – 177
வெடியுப்புச் சுண்ணம் – 33, 34
வெண்கலச் சிந்தூரம் – 114, 115
வெள்ளீய ராசிச் சிந்தூரம் – 139 – 142
வைத்தியர் சாபம் – 143 – 145

காரியச் சிந்தூரம் – 185 – 192
கிருட்டிண அப்பிரகச் சிந்தூரம் – 77 – 83
குட்டத்துக்கு லேகியம் – 60 – 66
குரு[illegible] – 160 – 168
சயத்துக்கு லேகியம் – 73 – 76
சரக்கு கத்தி – 251 – 254
சவுரித் தைலம் – 266 – 268
சித்தி சர்க்கரை – 84 – 88
சூத பற்பம் – 57 – 59
சூத பற்பம் – 212 – 215
தலைமுறை சிந்தூரம் – 17 – 23
தாமிரச் சிந்தூரம் – 120 – 124
தாளக செயம் – 118, 119
தாளக பற்பம் – 35, 36
துப்பாள் சிந்தூரம் – 232 – 234
துருசு சிந்தூரம் – 100, 101
துளசி லேகியம் – 173 – 175
நவசிந்தாமணி லேகியம் – 125 – 133
நவலோகச் சிந்தூரம் – 235, 236
நாக சிந்தூரம் – 178 – 181
நாக பற்ப சிந்தூரம் – 242 – 250
நிம்பினைக் கத்து – 44 – 54
[illegible] – 24 – 30
பஞ்சலோக சிந்தூரம் – 223 – 227
பாண்டுக்கு லேகியம் – 104 – 108
பூரண சந்திரோதயம் – 193 – 203
பூரண சயமாக்கினி குமாரன் – 204 – 207
பேதிக்கு லேகியம் – 220 – 222
மகாராச பூபதி – 237 – 241
மண்டூரச் சிந்தூரம் – 230, 231
மண்டூரச் சிந்தூரம் லேகியம் – 109 – 111
முத்துமணிச் சிந்தூரம் – 116, 117

# அகத்தியர் வைத்தியம் 300

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தால் அட்டசித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வைத்தியநூல் வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானை கடைகெட் டானைப்
புழுக்குழியில் விழுந்தானை புதல்வன் தன்னை
சாதகமாய் மனமடங்கி யறிவிற் கூட்டும்
தற்பரமாய் நின்றகண பதியே காப்பே. (1)

கணபதியின் பதத்தாலே கீழ்முக் கோணம்
கரையடங்காப் பிறப்பான கடவுளார் பாதம்
கணபதியைக் குண்டலியிற் கண்டு தேறிக்
கனலெழுந்து வாயுவந்த புரியட் டத்தாற்
கணபதியே பிறப்பு ஆண்பெண் ணாகிக்
கரைகொள்ளாக் காதமொடு விந்து வாகிக்
கணபதியைப் பெற்றெடுத்த விந்து வாசல்
கழறுகின்ற யிருகுறியுங் காணுங் காணே. (2)

காணப்பா புரியட்டம் எட்டி னோடு
கலந்ததப்பா பூரணந்தான் கண்டத் தோடே
தோணப்பா இடகலைக்குச் சோடசமே பாயும்
சுகமாகப் பிங்கலைக்குப் பன்னி ரண்டாம்
பேணப்பா யிதனுள்விட்ட குறையி னாலே
பெண்ணோடு புருடனங்கே சேரும் போது
ஊணப்பா பிரணவங்கொண் டுயர்ந்த சென்மம்
உத்தமனே யதிற்பிறந்த நோய்கள் தானே. (3)

தானென்ற சபையேழுந் தொண்ணூற் றாறும்
தத்துவமா மிவர்களுக்குப் பஞ்ச கர்த்தா
தனென்றே கொண்டலைக்கும் தசமாம் வாயு
சாதகமாய் அபானனுட தத்து வந்தான்
தானென்ற நின்றவிடம் வாத பித்தம்
சார்ந்த சிலேற்பனத்தோடு மூன்றி லேதான்
தானென்ற வியாதியெல்லாம் வளரு மப்பா
சடலமெல்லாம் நோயிட்ட கூடு தானே. (4)

கூடுகட்டி குடியிருக்கும் குறும்ப ரேகேள்
கொள்ளையிட்டார் கற்பமெல்லாங் கூறாய்த் தின்ன
நாடுமப்போ வொன்றோடே வொன்று வேறாய்
நடைதொடுக்க மாட்டாமல் கற்பந் தின்னார்
தேடுமப்போ சிவயோகஞ் செய்ய வேணும்
தெளிவாக வாதசித்தி காண வேணும்
ஆடுமப்போ காயசித்தி பண்ணும் போது
அதுக்குமுன்னே அவமிருத்துத் தட்டு றேனே. (5)

## காந்த சத்து

தட்டுறே னென்பதற்குக் கற்பங் கேளு
சாதகமாய்க் காந்தமது பலந்தான் அஞ்சு
தொட்டிறதோர் வெள்ளையது பலந்தா னொன்று
திரமான காரமது பலந்தா னொன்று

ஒட்டிடவே சாரமது பலந்தா னொன்று
உத்தமனே தாளகந்தான் பலந்தா னொன்று
பட்டிடவே பூநீறு கழஞ்சி யொன்று
பாங்கான வெண்கரு வர்க்கம்பால் பாரே. (6)

வார்த்துவைக்கச் சலமாகுஞ் சலத்தை விட்டு
மாட்டுவாய்ப் பதினொன்றே மருந்து கூட்டிச்
சேர்த்துநீ யரைத்திடுவாய் இரண்டு சாமம்
திறமாகப் பின்பதனை வில்லை செய்து
பேர்த்திடுவாய் ரவியிலே உலர்ந்த பின்பு
புகழான மூசையிலே யிட்டு மூடிக்
கார்த்திடுவாய் மேலோடு கொண்டு மூடிக்
கைமுறையாய்ச் சீலைமண் கனக்கச் செய்யே. (7)

செய்யப்பா உலைமுகத்திற் துருத்தி யிரண்டு
திறமாக ஊதிவிடு யழுக மட்டும்
பைய்யப்பா யெடுத்ததனை யாற வைத்துப்
பாங்காகப் பின்பொருக்கால் நன்றா யூது
மெய்யப்பா பின்பதனை யாற வைத்து
விளங்கவே பின்பொருக்கால் நன்றா யூது
அய்யப்பா காந்தமது திராப்போல் நிற்கும்
ஆகர்கா காந்தசத்து அருமை தானே. (8)

## காந்த ஈயம்

அருமையென்ற காந்தசத்தை ஒருகுகை யில்வைத்து
அப்பனே மூன்றுதரம் அழுக ஊது
பெருமையென்ற காந்தமது சத்தாய்ப் போகும்
பேச்சேது சூதமொரு பலத்தைத் தாக்கிக்
கருமையென்ற காந்தமது சோதித் தேற்கக்
கருவளையல் வீரமொடு காரங் கூட்டி
உருமையென்ற சாரமுடன் பழச்சாற்றா லாட்டி
உலர்த்துவாய் பணம்போலே வில்லை செய்தே. (9)

வில்லைசெய்த மருந்தெல்லாஞ் சமனாய்க் கொண்டு
மீறியதோர் காந்தசத்து உருகும்போது
சொல்லுவேன் சத்துக்குச் சமனாய்த் தாக்கு
துடியாக வொவ்வொன்றாய்க் கொடுக்க வாங்கும்
அல்லவே சமனாகத் தாக்கிப் பின்பு
அப்பனே ஓடுகொண்டு சீலை செய்து
வல்லதொரு குகையமுக நன்றா யூது
மகத்தான காந்தமது வங்கந் தானே. (10)

## அயச்சத்து

தானென்ற காந்தமது ஈய மாகச்
சாத்திரமெல் லாம்படித்தா ரருமை யாக
நானென்ற ஆணவத்தால் வெளியிற் போட்டேன்
நாட்டாதே கள்ளரென்ற பிள்ளைக் கெல்லாம்
வானென்ற ஈயமதைப் பதனம் பண்ணு
வன்மையா யிதனுடைய நாதங் கேளு
வேனென்ற அயப்பொடிதான் பலந்தா னஞ்சு
வெள்ளையொடு தாளகந்தான் சூதமுங் கூட்டே. (11)

கூட்டுவாய் காரமொடு சாரந் தன்னைக்
குறிப்பாக வகைக்குவொரு பலம்வீதங் கட்டி
மூட்டுவாய் பூநீறு கழஞ்சி யொன்று
முந்தியதோர் வெண்கருவின் நீரா லாட்டி
மாட்டுவா யிருசாம மரைத்துப் பின்பு
வளமாக வில்லைசெய்து ரவியிற் போடு
நாட்டுவா யுலர்ந்தபின்பு மூசைக் குள்ளாய்
நலமாக வைத்ததனைக் குகைவாய் மூடே. (12)

மூடப்பா ஓடுகொண்டு சீலை செய்து
முன்போலே யுருக்கியெடு வெண்கலமாய் நிற்கும்
தேடப்பா முன்போலே சோதித் தேறும்
செகமெல்லாம் இரும்பினுட ஈயங் காணார்

ஆடப்பா யிதினாட்டு சித்த ராட்டு
அரகரா காந்தமிதிற் கூடிற் றானால்
வீடப்பா பலத்திட மறலி யேது
மிதமிஞ்சு மென்றுசித்தர் மறைத்திட் டாரே. (13)

## அயகாந்த சத்து

மறைத்திட்டார் அயத்தினொடு காந்தந் தன்னை
மக்களே அவமிருத்துத் தட்டு மென்று
குறைத்திட்டார் அறுசுவையுங் கழற்று முன்பே
கொள்வதற்கு முதற்கற்ப மென்று கூறார்
நிறைத்திட்டே னுலகமெல்லாஞ் சித்தாய்ப் போக
நிலையான தாறுவரை யுறுதி சொன்னேன்
முறைத்திட்டந் தப்பாமல் கற்ப மேற
முந்தவே அயகாந்தம் மொழிந்திட்டேனே. (14)

மொழிந்ததொரு அயகாந்தம் பலந்தா னொன்று
முத்தமிழ்சேர் புலத்தியனே வகையொன் றுக்குத்
தெளிந்ததொரு தங்கமது பலந்தா னொன்று
சேரவே மூன்றுமொன்றா யுருக்கி யாட்டு
குளிந்ததொரு கல்வத்திற் பொடியாய்ச் செய்து
கூட்டப்பா கண்டெடைக்குச் சவ்வீ ரத்தை
வழிந்ததொரு ரசமதிலே பனியிற் போடு
மாட்டடா தங்கயெடை சூதந் தானே. (15)

## வாலை ரசம்

சூதமுற வாலையத்தாம் நாள்மூன் றில்தான்
சுருக்காக நித்தியமொரு சாம மாட்டி
நாதமுற முலைப்பாலா லாட்டு ஆட்டு
ராப்பனியிற் போட்டுவிடு மூன்று நாள்தான்
வாதமுற வேதையிடும் வாதிக் கெல்லாம்
வைத்தியத்தில் வாலைரச மாகச் சொன்னேன்
வேதையிதி லோடாது ஆசி யாதே
வேதைக்குக் குருவேறே விளம்பக் கேளே. (16)

## தளமுறு சிந்தூரம்

விளம்புவேன் வாலைரசங் கண்டெடைக் கிரட்டி
மீறியதோர் கந்தியிட்டு சிலைபத் தொன்று
வளம்புகலப் பொற்றலையின் சாற்றா லாட்டி
வாசமாக யிரண்டுநாள் அரைத்த பின்பு
உளம்பிலக்கக் குப்பியிலே யேற்றித் தீயிட்டு
உத்தமனே வாலுகையில் தீயை மூட்டு
தளம்பிடவே மூன்றுநாள் முத்தீ யிட்டுந்
தப்பாது தளமுறுசிந் தூரந் தானே. (17)

சிந்தூரஞ் சிவப்பென்றால் முருக்கம்பூ வொவ்வா
தேகத்துக் கழிவேது வயிரவனைப் பூசி
சிந்தூர மெடுத்தரைத்துச் சிவனைப் பூசி
தேவியோடு கணபதிக்குப் பூசை பண்ணு
சிந்தூரந் தின்பவர்க்குச் சித்தி யப்பா
தேகத்தில் வியாதியெல்லாஞ் சிதறிப் போக
சிந்தூரங் குன்றியெடை மூதண் டத்தின்
திறமான லேகியத்தில் பொதிந்து தின்னே. (18)

தின்னவே லேகியந்தான் முன்னே செய்வாய்
தீட்சையிரு நூறுள்ளே திடமாய்ச் சொன்னேன்
மன்னவே லேகியத்தை யாருஞ் சொல்லார்
வளமான லேகியத்தில் காசெடைதான் கொள்ளு
உன்னவே மண்டலங்கொள் வயது கண்டு
உத்தமனே நோயென்ற தெல்லாம் போகும்
அன்னமே பால்சீனி பத்தி யந்தான்
அப்பனே மற்றொன்று மாகா தெண்ணே. (19

ஆகாது என்றுசொன்ன தேதென் றாக்கால்
அவமிருத்துத் தட்டுதற்குப் பத்தியும் வேணும்
வாகான சிந்தூரம் நோய்கொண் டோர்க்கு
வளமான அநுபான மறிந்து கூட்டி

தாகான மண்டலமே குன்றி வீதம்
சாதித்தால் நோயெல்லாந் தவறுண் டேபோம்
பாகான பத்தியங்கள் காக்க வேண்டாம்
பத்தியமாம் புகையிலையும் புளியுந் தானே. (20)

தானென்ற திரண்டுவிட்டுக் கொண்டாற் கேளு
தவறாது சகலவியா திகளுந் தீரும்
ஊனென்ற உடம்பெடுத்தால் வேகாக் கலவி
உத்தமனே யிதுக்கல்லாந் தான்சிந் தூரம்
மானென்ற பெண்கள்வலைக் குள்ளே சிக்கி
மாய்வதற்குச் சிந்தூரம் வைப்பைச் சொன்னேன்
தானென்ற பேச்சுப்போய்த் தன்னைக் காணும்
சாதகமாய் லட்சயத்தின் குறியைப் பாரே. (21)

பாரப்பா வாசியினால் யோக மாகும்
பரிவான தீட்சையினால் சித்தி யாகும்
காரப்பா காமமெல்லாம் நிவர்த்தி செய்து
கற்பத்தில் முதற்கற்பம் அயக்காந்தங் கொள்ளு
சேரப்பா சித்திபெற்ற தேதி னாலே
சிந்தூரம் அயத்தாலே தெளிந்து காணும்
பேரப்பா கேட்டுடனே எமதூ தர்கள்
பேசாதே வோடுவர்காண் பின்பா ராரே. (22)

பாராத சித்தாந்த மொன்று மில்லை
பஞ்சகர்த்தா சடலமது வேகு மட்டும்
சேராதே யென்றுசொல்லும் வேதாந் தத்தைத்
தெளிந்தறிய மாட்டார்கள் சைவ மாடு
கூராதே பூரணமே தென்று சொல்லி
கோவிலுக்குள் சுயம்வந்து பாதா ரத்தை
சேராதே யிருப்பதென்ன வென்று சொல்லி
செப்புமோ சித்தாந்தம் தெளிவாய் மாடே. (23)

## நூல்தொகை

தெளிவான மனத்தோர்க்கு வாதஞ் சொன்னேன்
திடமறியா மூடருக்குத் திடமுஞ் சொன்னேன்
தெளிவான மனத்தோர்க்கு வைத்தியமுஞ் சொன்னேன்
செய்முறையிற் கற்பநெறி சேர வேண்டி
தெளிவான மனத்தோர்க்கு ஞானஞ் சொன்னேன்
சித்தியுடன் முத்திபெற யோகஞ் சொன்னேன்
தெளிவான மனத்தோர்க்கு மவுனஞ் சொன்னேன்
தீட்சையொடு பூசைவிதி செப்பி னேனே. (24)

செப்பினேன் வாதத்தில் லட்சங் காப்பு
திறமான வைத்தியத்தி லிரண்டு லட்சம்
செப்பினேன் வாதத்தி லாயி ரந்தான்
திறமாக யிரண்டுகாண்டந் திறமை தேர்ந்து
செப்பினேன் சூத்திரந்தா னிருநூ றப்பா
தீட்சைவிதி யிருநூறு தெளிவாய்ச் சொன்னேன்
செப்பினேன் ஞானமாயி ரந்தான் தேர்ந்து
தெளிவாக யிருநூறிற் திறந்திட் டேனே. (25)

திறந்திட்டேன் வைத்தியத்தில் குறுக்கி லட்சம்
செப்பினே னதிற்பாதி யதனைத் தேர்ந்து
திறந்திட்டேன் வாதமதில் சூத்திரம் போல
தெளிவாக வைத்தியத்திற் சூத்திரங் கட்டி
திறந்திட்டேன் இவ்வண்ண மூன்று நூறும்
சிறுபிள்ளைக் கானாலும் வைத்தியந் தேறும்
திறந்திட்டேன் பூரணத்தின் சாத்திரந்தா னப்பா
செயலிருபத் தோராயி ரத்தாறு நூறே. (26)

நூறான யிருபத்து வொன்று நூறும்
நுகலுவே னறுபத்தி னாலு காண்டம்
வீறான திதைக்குறுக்கிச் சூத்திரம்போ லப்பா
வெட்டவெளி பூரணசூத் திரத்தைச் சொன்னேன்

கூறான யிருநூறும் பதினா றுக்குள்
கொட்டினேன் சரியையொடு கிரிகை யோடு
பேறான யோகமொடு ஞானத் தோடு
பலத்தசு வாசந்தனில் பேணிக் காணே. (27)

காணப்பா விட்டகுறை மார்க்கத் தோர்க்குக்
கைவிட்ட சூத்திரமாய் வெளியிற் போட்டேன்
தோணப்பா கற்பத்தில் பத்து நூறு
துடியாகக் குறுக்கியதை நூறாய்ச் சொன்னேன்
பேணப்பா கற்பநூ லிருநூறு சொன்னேன்
பிலத்ததொரு மாந்திரிகம் ஐநூறு சொன்னேன்
பூணப்பா இந்திரம யேந்திர சாலம்
பூட்டினேன் ஆயிரந்தான் புகழ்ந்து பாரே. (28)

பாரப்பா அடிதொடுத்து கற்பங் கொண்டு
பரிவாக உண்டுவருங் காலந் தன்னில்
சாரப்பா வாதமொடு பித்தத் தாலே
தனித்தசிலேற் பனத்தாலே தாறு மாறாம்
தூரப்பா பாராமற் கற்பங் கொண்டு
சுழன்றுநீ யலையாதே நோய்கள் தீர
காரப்பா சிந்தூர யினங்கள் தோறுங்
கட்டாகச் சிந்தூரித்துக் கடக்க வையே. (29)

வையப்பா கற்பங்கள் கொள்ளு முன்னே
வகையான லேகியங்கள் சூர ணங்கள்
செய்யப்பா கிருதங்கள் தைல மோடு
செய்துகொண்டு கெட்டியாய்க் கிரமத் தோடே
பொய்யப்பா வுரைப்பதென்ன புத்தி சொன்னேன்
புலத்தியனே அதுக்குரைத்த வைத்திய மப்பா
மெய்யப்பா வென்றோர்க்கு மெய்யாய் நிற்கும்
விழலென்றாற் பொய்யாகும் விளம்பக் கேளே. (30)

## கர்ப்பூர சிலாசத்து

கேளப்பா கர்ப்பூர சிலாசத் துத்தான்
கெடியாகப் பலமொன்று பொரிகா ரந்தான்
நாளப்பா பலமொன்று ரெண்டுங் கூட்டி
நலமான பருத்திநிறத் துத்தி வேர்த்தோல்
நீளப்பா பாங்காகக் கசாயஞ் செய்து
நிசமாக விட்டாட்டு வொருநாள் மட்டும்
ஆளப்பா அஞ்செருவில் புடத்தைப் போடு
ஆறியெடு கல்வத்துள் ளாட்டத் தூளே. (31)

ஆட்டத்தூ ளாகுமடா வெண்கருவை விட்டு
அரைத்துவில்லை செய்துரவியி லுலர்த்திக் கொண்டு
மாட்டவே அஞ்செருவில் புடத்தைப் போடு
வாகாக அரைத்தஞ்சு தரமா னால்கேள்
நாட்டவே வெண்பொடியாம் பதனம் பண்ணு
நலமான பெருவயிறு மகோத ரங்கள்
ஓட்டப்பா நீர்ச்சிறுப்பு கல்ல டைப்பான்
ஓடுமப்பா வெடியுப்புச் சுண்ண நீறே. (32)

## வெடியுப்புச் சுண்ணம்

வெடியுப்புப் பலம்பத்து பூநீறு பத்து
வேகமடா பழச்சாற்றிற் சாம மாட்டு
அடிகனத்த கரண்டியிலே வழித்து வைத்து
அப்பனே கொதிக்கவைக்கச் சுண்ண மாகும்
கொடிதப்பா பீங்கானில் நீற தாகும்
கூறினேன் வைத்தியத்தி லுப்பு நீறை
துடியப்பா சிலாசத்து தனக்கு முன்னே
தோயப்பா அரைத்ததனைப் புடத்திற் போடே. (33)

போடப்பா யிதுவல்லோ அறுத்து வாங்கும்
பொறிவந்து கற்பங்கள் கொள்ளும் போது
நாடப்பா தசவாய்வு பேதங் கொண்டு
நற்சதிரக் கொடியுதரம் பெருத்துக் காணும்

கூடப்பா யிதுக்கல்லோ காரச் சுண்ணம்
கொட்டினேன் சத்தோடே கூட்டிக் கொண்டு
சாடப்பா யுண்கையிலே சத்துக் காரம்
தடையறவே புலிபோலே தாக்கும் பாரே. (34)

## அப்பிரகச் சத்து

தாக்கிடவே அப்பிரகச் சத்துச் சொன்னேன்
சாதிப்பொன் னப்பிரகம் நவநீ தந்தான்
வாக்கிடவே பலமொன்று வெடியுப் போடு
வளமான வெண்காரஞ் சாரம் வெள்ளை
தாக்கிடவே தாளகமுங் கவுரி சூதம்
சங்கமுடி தாரமிரு தார சிங்கி
தேக்கிடவே பூநாக முலர்ந்த தப்பா
சேர்த்திடுவாய் வகைக்கொரு கழஞ்சு தானே. (35)

கழஞ்சியடா பூநீறு பதினொன் றாகக்
கட்டுமடா நவநீதத் தோடுங் கூட்டி
வழஞ்சியரை கல்வத்தில் வெண்கருநீ ராலே
மாட்டிடுவா யிருசாமம் வில்லை செய்து
குழஞ்சிவிடா வச்சிரகு கைக்குள்ளே வைத்து
கூறாகச் சில்லிட்டுச் சீலை செய்து
தழஞ்சுதடா அஞ்சுதர மழுகப் பாரு
தாக்குலையி லூதிடவே சத்து மாமே. (36)

சத்துதனைச் சோதிப்பாய் மணியாந் தன்னைச்
சதிராகச் சோதித்த மருந்து கொண்டு
உத்துவாசத் தெடைக்குச் சோதித் தேபார்
உத்தமனே சரிகைவெள்ளி போலா மீயம்
பெத்துதடா சூதகத்தைப் பார்க்கையிலே கொல்லும்
பெரியோர்கள் சொல்லார்கள் நவநீத சத்து
சித்துவருங் கற்பத்துக் குறுதி மெத்த
சேரப்பா புடத்தங்கஞ் செலுத்தி யாட்டே. (37)

ஆட்டுவாய் அப்பிரகச் சத்துத் தானே
அப்பனே பலமொன் றுருகும் போது
மூட்டுவாய் தங்கமொரு பலந்தா னப்பா
மூசையிலே யிரண்டுமொன்றா யுருக்கி வாங்கிப்
போட்டிடுவாய் கல்வத்திற் பொடிக்கத் தூளாம்
புகழாகக் கண்டெடைக்கு வீரம் போடு
கொட்டிடுவாய் தங்கயெடை சூதம் வாரு
கைமுறையாய் முலைப்பாலி ரைத்துப் போடே. (38)

போடப்பா நாளொன்றுக் கொருசா மந்தான்
புகழாக மூன்றுநாள் பனியிற் போடு
ஆடப்பா சுருக்கட்டைப் போலே சூதம்
ஆமப்பா கந்தகந்தான் ரெட்டிப் பிட்டு
தேடப்பா பத்திலொன்று சிலையு மிட்டு
தீர்க்கமாய்ப் பெற்றலையின் சாற்றா லாட்டி
சூடப்பா ரெண்டுநா ளரைத்த பின்பு
சுகமாகப் பொடிசெய்து குப்பிக் கேற்றே. (39)

ஏற்றியே வாலுகையி லெரிப்பா யப்பா
என்சொல்வேன் மூன்றுநாள் சென்ற பின்பு
ஆற்றியே குப்பிக்குட் சலாகை யிட்டு
அடியிலே கிண்டிப்பார் கரகரப் பானால்
மாற்றியே சிந்தூரம் பவள வர்ணம்
வாச்சுதடா காயசித்தி வசமாய்ப் போச்சு
தேற்றியே விடுவனென்று தேகந் தன்னை
சித்திபண்ணும் முத்திபண்ணும் திறத்தைக் கேளே. (40)

திறமான அப்பிரகச் சிந்தூ ரந்தான்
செய்வதென்ன அறுதியென்றால் கற்பத் தாலே
நிறமான தோடங்கள் சயங்கள் மேகம்
நிலைகெட்ட கண்மயக்க மய்யல் தாகம்

குறமான குட்டங்கள் சாற்றிய ரோகம்
குன்மங்கள் முகரோகம் மூல ரோகம்
அறமான வாதபித்தஞ் சிலேற்ப னத்தால்
அளவற்ற நோய்களுமே யகன்று போமே. (41)

அகன்றுபோம் அப்பிரகச் சத்தென்று சொன்னால்
அப்பனே கற்பத்தை யுறுதி பண்ணும்
விகண்டமே வாராது விடமெல்லாந் தீரும்
வேணபடி கற்பத்தைத் தின்னு தின்னு
அகண்டமெல்லாம் நீயாக்கி மலைக்க வேண்டாம்
அப்பனே வழலைதள்ளி கடுக்காய் கொண்டு
குகம்பெறவே மூலிகற்பங் கொள்ளும் போது
குணியில்லா நோயெல்லா மெதிர்க்கும் பாரே. (42)

எதிர்த்துவரும் நோயெல்லா மெதிர்த்து வெட்டும்
இகத்தைவிட்டு பரத்துக்குள் ளாகப் பண்ணும்
மதிக்க வருங் கற்பமெல்லாம் வளமா யேத்தும்
மனநினைவை யறிவோடே வளர்ந்து யேறும்
துதிப்பதற்கு நாதவொலி காதிற் கேட்கும்
சொற்பெரிய குண்டலிக்குள் எழுந்தி மீளும்
கதிக்குறுதி அப்பிரகச் சத்துத் தங்கங்
கண்டாயோ சிந்தூர மாகை யாலே. (43)

## நிமிளைச் சத்து

ஆகாகா நிமிளைச்சத்து சொல்லக் கேளு
அப்பனே பொன்னிமிளை பலந்தா னொன்று
பாகான ரோமமது பலந்தா னொன்று
பழச்சாற்றி லூறவைத்து மூன்று நாள்தான்
வாகாகக் கழுவியதன் மேலே சுற்றி
மைந்தனே அரிதாரம் வங்க மிரண்டு
சாகவேபொன் னிமிளைமேற் பொதிந்த பின்பு
சாற்றவே ரோமத்தைச் சார்ந்து கேளே. (44)

கேளப்பா குகைக்குள்ளே அரைப்பலம்பூ நாகம்
கெடியாக வைத்ததன்மேல் மயிலிறகு நிற்கும்
வேளப்பா அரைப்பலந்தான் பரத்தி வைத்து
வெண்கார மதன்மேலே காற்பலந்தான் வைத்து
வாளப்பா பொன்னிமிளை கவசம் வைத்து
மாட்டப்பா அதன்மேலே காற்பலந்தான் காரம்
நாளப்பா அதன்மேலே அரைப்பலந்தான் பூரம்
நன்றாக அதன்மேலே அரைத்திடுபூ நீறே. (45)

பூநீறு கழஞ்சியொன்று மேலே தூவி
பூநாக மரைப்பலந்தா னதன்மேல் வைத்து
வேனாகக் குகைவாயி லோடு மூடி
விரியாமல் மண்சீலை அஞ்சு செய்து
தானாக உலையிலே ஊது ஊது
சாதகமாய்ப் பொன்னிமிளைச் சத்து மாகும்
வானவர்கள் போற்றுமிந்த நிமிளைச் சத்து
வளமான வெண்கலம்போலத் தகரும் பாரே. (46)

பாரப்பா நிமிளைச்சத்து சோதித்த பின்பு
பரிவான பொன்னிறம்போல் ஈயமாகும்
ஆரப்பா நிமிளைச்சத்து ஆருஞ் சொல்லார்
அப்பனே வைத்தியத்தி லுறுதி யாகும்
சேரப்பா கர்ப்பத்தால் வந்த தோடம்
தீருமடா நோய்களெல்லா மெப்படிதா னென்றால்
மேரப்பா பருவதம்போற் பஞ்சு வைத்து
மிளகுபோற் தீயைவைத்த கதைபோ லாமே. (47)

போமென்ற நிமிளைச்சத்து பலந்தா னொன்று
பூட்டப்பா மூசையிலே யுருகும் போது
ஆமென்ற கருநாகம் பலந்தா னொன்று
அப்பனே தங்கமது பலந்தா னிரண்டு

சாமென்ற தங்கமொடு வங்க மிரண்டு
சாந்தமாய்க் கல்வத்திற் பொடித்தத் தூளாம்
வேமென்ற வீரமது பலந்தான் நாலு
மேலான முலைப்பலி லாட்டு ஆட்டே. (48)

ஆட்டயிலே கோழியுட வெள்ளைமலங் கேளு
அப்பனே காற்பலந்தான் கூடப் போட்டு
மூட்டையிலே வாலைரசஞ் சவ்வு போலாம்
முறையான சூதமிரண்டு பலமே வாரு
மாட்டையிலே மூன்றுநாள் பனியிற் போடு
மறுபடிதான் கந்தகந்தான் பலமீ ராறு
கூட்டயிலே பொற்றலையின் சாற்றா லாட்டிக்
கொடியசிலை காற்பலந்தான் கூடப் போடே. (49)

போட்டிடுவாய் வில்லைசெய்து ரவியிற் தானே
பொடிசெய்வாய் பின்பெடுத்து குப்பிக் கேற்றி
நாட்டிடுவாய் வாலுகையில் மூன்று நாள்தான்
நலமாக முத்தீயும் நன்றா யிட்டு
மூட்டிடுவாய் சலாகைகொண்டு சோதித் தேபார்
முனையிலே கரகரக்கும் பதந்தான் பாரு
சூட்டிடுவாய் குப்பிதனை யுடைத்து வாங்கு
துய்யசிவப் பாம்நிமிளை சுருக்குத் தானே. (50)

சுருக்கான சிந்தூரம் நிமிளை யாச்சு
சொல்லக்கேள் குன்றியெடை யொருபோ துண்ண
கருப்பான பசுவின்பால் தன்னிற் கொள்ளு
கண்முழித்து மூடுமுன்னே பிணமும் பேசும்
வெருத்தான சடலத்தைக் கால னப்பா
மெய்யுளைச்சல் பொருத்துளைச்சல் தசைக்குள் தோடம்
முருக்கான விடநீர்கள் விடகடிகள் குட்டம்
முகவாத மேகமென்ற தெல்லாம் போமே. (51)

போமடா வாதத்தால் வந்த தோடம்
போக்குமடா பித்தத்தா லெழுந்த தோடம்
ஆமடா சிலேற்பனத்தால் வந்த தோடம்
அல்லாந்தான் நிமிளைச்சத் தைக்கண்ட போதே
நாமடா உனக்கெதிரே வென்று நோய்கள்
நாட்டிலே எவரிடத்துஞ் சொல்லப் போனால்
காமடா நிமிளையங்கே கண்ணாற் பார்த்தால்
கட்டோடே கடல்புக்கும் கதியில் லாதே. (52)

இல்லாதே யிருந்துகொண்டு கற்பங் கொண்டு
இலட்சயத்தின் அறிவோடே வாசி பார்த்து
வல்லமையாய்ச் சாதிக்கும் யோக சித்தி
மயமான குளிகைமுதல் மந்திர தீட்சை
நல்லதொரு பூசைவிதி யமிர்த லேகியம்
நலமான வாதமொடு பிலக்கக் கண்டு
செல்லுவாய் பின்பங்கே சித்த ரோடே
சேரவகை கொள்ளுவார் திறத்தைப் பாரே. (53)

திறமான வைத்தியத்தைச் சொன்னே னப்பா
திறங்கெட்ட லோகர்க்கோ செப்பி னேன்கேள்
உறவான வாதத்துள் எழுந்திப் பின்னே
உத்தமனே யினசாரி சரக்குந் தேர்ந்தால்
நிறுவிக்கும் வைத்தியந்தான் வாதிக் காகும்
நேரான காயசித்தி நிசம தாகும்
விறுதமாட லோகத்தோர் கள்வே ரோடே
வைத்திய மெல்லாம் வருமென் பாரே. (54)

## தாளக பற்பம்

பாரப்பா புலத்தியனே அய்யா கேளு
பாங்கான தாளகத்தின் நீறு சொல்வேன்
சேரப்பா தாளகந்தான் பலந்தா னொன்று
திறமான கற்சுண்ணத் துள்ளே வைத்து

சாரப்பா அமுரிவிட்டு நீற்று நீற்று
தாளகந்தான் சுத்தியதா மிரண்டு பத்தில்
வேரப்பா பழச்சாறு படிதா னூட்டு
வெள்ளைச்சி முலைப்பால்தான் படிகா லூட்டே. (55)

ஊட்டியபின் னரிதாரம் பொடிமுடிச் சாறு
ஊட்டியே யரைத்துடுவா யிரண்டு சாமம்
ஆட்டியபின் வில்லைசெய்து ரவியிற் போடு
அப்பனே மூன்றுநாள் காய்ந்த பின்பு
கூட்டியதோர் செருப்புக்கால் முடியின் சாறு
கொட்டுவாய் குகைக்குள்ளே புரசஞ் சாம்பல்
நாட்டியதோர் மேல்மூடி சீலை செய்து
நயமாக யிரண்டெருவிற் புடத்தைப் போடே. (56)

## சூத பற்பம்

புடம்போடத் தாளகந்தான் வெளுத்து நீறும்
பேசாதே தாளகத்தின் வெள்ளை தன்னை
திடம்பெறவே சிமிழுக்குள் பதனம் பண்ணு
செப்பக்கேள் சூதபற்பந் திறமாய்ச் சொல்வேன்
அடம்பிலையுங் கடம்பிலையுஞ் செருப்புக் காலும்
அப்பனே வகைக்குமொரு படிசா றுக்குள்
விடந்திட்டு வாரதிலே கரந்தைச் சாறு
விளங்கவே படியொன்று அதிலே வாரே. (57)

வார்த்திடுவாய் முன்புசெய்யும் வரிசை கேளு
வாகான காட்டுள்ளிக் கிழங்குச் சாறு
சேர்த்திடுவாய் கார்த்திகையின் கிழங்குச் சாறு
சேரவே அய்ங்கோல மூலிச் சாறு
ஏர்த்திடுவாய் வகைக்கொரு படிசா றாக
எடுத்தல்லோ சூதமொரு பலத்துக் குத்தான்
பார்த்திடுவாய் காந்தசந்தன கிண்ணத் துள்ளே
பதையாமற் சாகுமடா சுருக்குத் தாக்கே. (58)

சுருக்கிட்ட பின்பெடுத்து சூதந் தன்னை
துடியாகக் கல்வத்தி லிட்டுக் கொண்டு
வெருக்கிட்ட முன்சாற்றா லரைப்பா யப்பா
மெழுகுபோ லாகிவரும் வில்லை செய்வாய்
உருக்கிட்ட ரவியிலே காயப் போடு
உத்தமனே குகைக்குள்ளே வைத்து மூடி
வெருக்கிட்ட சீலைசெய்து புடத்தைப் போடு
வெளியிலே பரபூசை விளம்பச் செய்யே. (59)

## குட்டத்துக்கு லேகியம்

செய்யவே தேவியங்கே வார்த்தை சொல்வாள்
திடமான சூதபற்பம் வாச்சு தென்பாள்
பையவே அஞ்செருவிற் புடத்தைப் போட்டுப்
பாங்கான ரசவெள்ளை ரசகர்ப் பூரம்
மெய்யப்பா கற்பத்தால் குட்டம் மீறி
விடநீர்கள் குறைநோவு ஈண்ட தானால்
வையப்பா குன்றியெடை சூத பற்பம்
மகத்தான தாளகத்தின் பற்பங் கூட்டே. (60)

கூட்டுவாய் குன்றியெடை யிரண்டு சேர்த்து
கொள்ளுவாய் நூறாண்டின் வேம்பின் பட்டை
நீட்டுவாய் பலம்நூறு வெள்ளாட் டெச்சம்
நிசமாக அஞ்சுபத்துப் பலமே சேர்த்து
காட்டுவாய் பூத்தைலம் வடித்து வாங்கிக்
கருவான வீழிவேர் சூரணமே செய்து
மாட்டுவாய் செருப்புக்கால் தனிச்சா றாக
வாங்குவாய் படிநாலு அயத்தில் வாரே. (61)

வாரப்பா பனைவெல்லம் பலந்தான் பத்து
மருவியே கரைத்திடுவாய் அடுப்பில் வைத்து
சேரப்பா கமலத்தீ யாக மூட்டு
செப்பினேன் வேம்பினுட தைலந் தன்னை

கோரப்பா படியொன்று கூட விட்டு
கொட்டவே வீழிவேர்ச் சூரணத்தி னோடு
சாரப்பா படியரைதான் புங்கம் பூவும்
தனிச்சூர ணத்தோடே அரைத்துப் போடே. (62)

போடக்கேள் மிளகுசுக்கு ஓமம் காயம்
புத்தோட்டுத் தொட்டியுடன் கிராம்பு ஏலம்
ஆடக்கேள் சீரகம்மு மதுர மோடு
அப்பனே வீதமொன்று கழஞ்சி யொன்று
நாடக்கேள் கார்கோல ரிசிபலம் நாலு
நாட்டடா பறங்கியுட பட்டைபலம் நாலு
சூடக்கேள் இளவறுப்பாய்ச் சூரணமே செய்ய
சூரணமெல்லா மொன்றாய்க் கூட்டி வையே. (63)

வைத்தபின்பு காரெள்ளு பலந்தா னஞ்சு
மருவியிடி சேங்கொட்டை பலமிரண்டு கூட்டி
நைத்தபின்பு சூரணத்தைப் பிசைந்து கொண்டு
நலமாகப் பாகுசெய்து வருமந் நேரம்
பொய்த்ததல்ல சூரணத்தை யதிலே போடு
பூணவே தேனுமொரு படிதான் வாரு
மெய்த்திடவே ஆவின்நெய் படிதான் வாரு
மெழுகுபத மாம்போதே வழித்து வாங்குகே. (64)

வழித்துவைப்பாய் பீங்கானுக் குள்ளே நீதான்
வாகாகத் தினமொன்றுக் கிருநே ரந்தான்
கழிப்பாக லேகியத்தைக் கழஞ்சு வீதம்
கணபதியை உள்ளுக்குள் தியானம் பண்ணி
ஒழித்திடவே முன்சொன்ன பற்பங் கூட்டி
உண்ணவே மண்டலந்தான் புளியா காது
சழிப்பான புகையிலையும் வழுதலங் காயுந்
தான்விட்டுப் பாலுப்பைச் சற்றே கூட்டே. (65)

கூட்டோடே பதினெட்டுக் குட்ட மெல்லாம்
குடிபோறோ மொன்றுசொல்லி சட்டை தள்ளும்
தாட்டோடு வாராது பத்தி யந்தான்
தப்பினால் சண்ணுமடா தாளகமுஞ் சூதம்
வீட்டோடே கிடந்துகொண்டு பத்தியமுங் காத்தால்
வெகுசுருக்காய்க் கேட்குமடா சூத பற்பம்
பாட்டோடு துன்பம்விட்டுத் துயரம் நீங்கிப்
பரிசனத்தின் வேதையைப்போல் தேக மாமே. (66)

## அண்ட பற்பம்

ஆமப்பா அண்டோடு பலந்தா னொன்று
அப்பனே சுதமொடு கார சாரம்
தாமப்பா கவுரிவெள்ளை அரிதா ரந்தான்
சாதகமாய் மிருதார சிங்கி யோடு
ஏமப்பா வகையொன்று கழஞ்சு ரெண்டு
எல்லாந்தான் கல்வத்தி லரைக்கக் கேளு
நாமப்பா வெண்கருநீர் விட்டே யாட்டி
நலமாகச் சாமமிரண்டு வில்லை கட்டே. (67)

கட்டியபின் ரவியிலே மூன்று நாள்தான்
காய்ந்தபின்பு குகைக்குள்ளே வைத்துமூடி
ஒட்டியே சீலைமண்செய் துலையி லூது
உத்தமனே உருமணியாய் நிற்கும் பாரு
வெட்டினியாய் மண்டோடு வெண்கலம்போற் தகரும்
விள்ளார்கள் பெரியோர்க ளுபரசத்துக் காதி
அட்டியில்லை அண்டசத்தைச் சோதித் தேதான்
அப்பனே ஈயமதாம் பலந்தான் தூக்கே. (68)

தூக்கப்பா சமனாகத் தங்கந் தன்னை
துடியாக யிரண்டுமொன்றா யுருகும் போது
தாக்கப்பா சூதமொரு பலத்தை வாரு
தவளையைச் சர்ப்பமது விழுங்கும் வாறாம்

போக்கப்பா நாகமொரு பலத்தைப் போடு
போட்டபின்பு வீரமொரு பலந்தான் போடு
வாக்கப்பா லிங்கமொரு பலந்தான் போடு
மருவநின்று உருகுமடா கழங்க மாச்சே. (69)

ஆச்சப்பா கழங்கத்தைக் கல்வத் திட்டு
அடங்காத கந்தகந்தா னிரட்டிப் பிட்டு
வாச்சப்பா பத்திலொன்று சிலையு மிட்டு
வாகாகக் கற்றாழம் பாலி லாட்டு
வீச்சப்பா நாளொன்று பெற்றலையின் சாற்றால்
விளங்கவரை யிரண்டுநா ளான பின்பு
பாச்சப்பா வில்லைசெய்து ரவியிற் போடு
பாங்காக மூன்றுநாள் காய்ந்த பின்பே. (70)

காய்ந்தபின்பு குப்பியிலே செலுத்திக் கொண்டு
கருணைபெற வேணுமென்றே வாலு கேந்திரம்
வாய்ந்ததொரு முத்தீயு மாட்டு மாட்டு
வளமாக நாலாநாள் குப்பி வாங்கு
சாய்ந்ததொரு அருணனைப்போற் சிந்தூ ரந்தான்
சாதிக்க எதிராளி எதிர்க்க மாட்டான்
ஆய்ந்ததொரு அண்டத்தின் வங்க நாகம்
ஆடகமாம் சூதகந்தி அருளைப் பாரே. (71)

அருளான கற்பமங்கே கொள்ளும் போது
அடங்காத தாகமொடு நீரி றக்கம்
மருளான மயக்கமொடு கண்ணில் மையல்
வாதத்தினா லெழுந்ததொரு ஈளை ரோகம்
சுருளான மந்தார காச மோடு
சுவாசகா சங்களொடு தசையிற் தோடம்
கருவான கற்பத்தால் கலைந்த நோய்கள்
கண்காணா தோடுமடா கண்டு பாரே. (72)

## சயத்துக்கு லேகியம்

கண்டுகொள்ளு மண்டலத்தின் சிந்தூ ரந்தான்
கலக்குமடா நாடியெல்லா மிறுகுந் தேகம்
உண்டுவிடுங் குன்றியெடை பனைவெல் லத்தில்
உத்தமனே யொருபோது கொண்டாற் போதும்
மண்டுகின்ற சயரோக மிஞ்சிற் றானால்
வகையொன்று சொல்லக்கேள் ஆடா தோடை
இண்டுசங்கு தூதுவளை முருக்கு முல்லை
இளந்துளசி கண்டங்கத் தரியா மென்னே. (73)

என்னவே மூலிகைதான் வகையொன் றுக்கு
இடித்ததொரு சாறப்பா படிவீ தந்தான்
சொன்னதொரு மூலியுட சாற்றை யெல்லாம்
தோணவே பனைவெல்லம் பலமூன்று பத்து
அன்னவே அடுப்பில்வைத்துக் காயும் போது
அரத்தையொடு திரிகடுகு திரிப லாதி
முன்னவே கற்கண்டு வசம்பி னோடு
முழங்கவே வகையொன்று பலந்தா னிரண்டே. (74)

பலமான தொருபலந்தான் நெற்பொரியுங் கூட்டி
பாங்காக மருந்தெல்லாஞ் சூர ணித்து
செலமான சாறெல்லாம் பாகு சேர்த்துத்
திடமாகச் சூரணத்தை யதிலே பாய்ச்சு
பிலமான தேனதிலே படிகால் வாரு
பேசாதே ஆவின்நெய் படிதான் வாரு
குலமான லேகியமாய் வழித்து வைத்துக்
கூசாதே பீங்கானிற் பதனம் பண்ணே. (75)

பதனமாய் வைத்திருப்பாய் லேகி யத்தைப்
பாங்காகக் கழஞ்சுநிறை யெடுத்துக் கொண்டு
அதனமாய் அண்டத்தின் சிந்தூ ரத்தைச்
சுருக்காகக் குன்றியெடை யொருபோ துண்ண

விதனமெல்லா மொழிந்ததடா சயம்போன போக்கு
வேரோடே யறுத்துதடா உபரசத்தின் வேகம்
மதனகாமீ சுரமாம் விந்தைக் கட்டும்
மங்கையரைத் தோய்ந்தாலும் வாரா தென்னே. (76)

## கிருட்டிண அப்பிரகச் சிந்தூரம்

வாராது கிருட்டிணஅப் பிரகந் தன்னை
வாய்ப்பாக நவநீதஞ் செய்து கொண்டு
போராது பலமொன்று தூக்கிக் கொண்டு
பிலத்தவெடி யுப்புடனே கார சாரம்
சாராது சீனமுடன் சூடன் கூட்டி
தயவாகக் கல்லுப்பு வகையொன் றுக்கு
பாராதே கழஞ்சியென்று கூடப் போட்டுப்
பாங்கான பழச்சாற்றா லொருநா ளாட்டே. (77)

ஆட்டியபின் வில்லைசெய் துலரப் போடு
அப்பனேஅன் பதெருக்குள் புடத்தைப் போடு
மூட்டியபின் னெடுத்ததனைக் கல்வத் திட்டு
முழங்கவே கர்ப்பூர வள்ளிச் சாற்றால்
ஊட்டியபின் னரைத்திடுவாய் பலந்தான் கந்தி
உறப்போடு நாளொன்று சென்றால் வில்லை
காட்டிடுவாய் ரவிமுகத்தி லுலர்ந்த பின்பு
கட்டக்கேள் அன்பதெருக் குள்ளே போடே. (78)

போடப்பா புடமாறி யெடுத்துக் கொண்டு
புகழாகப் பழச்சாற்றால் கல்வத் திட்டு
ஆடப்பா நாளொன்று அரைத்து வில்லை
அப்பனே உலர்த்திமுன்போற புடத்திற போடு
தேடப்பா ஆறினபின் கல்வத் திட்டு
திடமாகக் குட்டித்தக் காளிச் சாற்றால்
கூடப்பா நாளொன்று அரைத்த பின்பு
குமுறவே வில்லைசெய்து புடத்திற போடே. (79)

புடமாறி யெடுத்ததனை யெருக்கம் பாலால்
பேசாதே நாளொன்று அரைப்பா யப்பா
திடமாக வில்லைதனை யுலர்த்திக் கொண்டு
சிறப்பாக முன்போலே புடத்திற் போடு
நடமாடும் பின்பொருக்கால் பழச்சாற் றாலே
நலியாதே தினமொன்று அரைத்த பின்பு
உடனாடு சத்துருவாய்க் கார சாரம்
உத்தமனே தளுக்கெல்லாந் தின்ற வாறே. (80)

வாறுடனே கருத்திருந்த தேவி நாதம்
மாண்டதடா கனபுடமாய் மாட்டு மாட்டு
கூறுடனே அப்பிரக நவநீ தத்தைக்
கொண்டவனார் வைத்தியத்திற் கொட்டி னேன்நான்
வீறுடனே சிந்தூரம் நன்றா காட்டால்
விளங்கவே பொற்றலையின் சாற்றா லாட்டித்
தேறுடனே நூற்றெருவிற் புடத்தைப் போடு
சிந்தூர மாகுமடா செப்பக் கேளே. (81)

கேளப்பா அப்பிரகச் சிந்தூ ரத்தை
கெடியாகத் திரிகடுகு தண்ணீர்க் கூட்டி
வாளப்பா தேன்நெய்யும் கலந்து கொண்டு
மருவியே சிந்தூரங் குன்றி கூட்டி
கோளப்பா கற்பத்தால் வந்த தோடம்
கூட்டோடே போகுமடா பத்து நாள்கொள்
ஆளப்பா உதரத்தில் வாய்வு வெல்லாம்
அபானத்தில் கீழ்வாசல் புக்கிப் போச்சே. (82)

போச்சப்பா மேகமென்ற தெல்லாம் போகும்
பூண்டதொரு நீர்ச்சுருக்கம் தீருந் தீரும்
ஆச்சப்பா சீந்தியுட சர்க்கரையி னாலே
ஆச்சரிய அத்திசுரம் தோட மில்லை

போச்சப்பா நாடிகளில் தோட மில்லை
பிரபலமாய்த் தேகமெல்லாம் குளிர்ச்சி பண்ணும்
வாச்சப்பா வைத்தியத்திற் சர்க்கரையைச் சொல்லார்
வாய்ப்பேச்சோ வைத்தியந்தான் வணங்கிக் கேளே. (83)

## சீந்தி சர்க்கரை

வணங்கியே நீகேளு புலத்தியனே அய்யா
மாறாட்ட மில்லாமற் சர்க்கரையைச் சொல்வேன்
குணங்கியே போகாமல் மருந்துண் டாகக்
கொண்டுவந்து வெயிலுலர்த்தி காய்ந்த பின்பு
பிணங்கியே போகாமல் யிடித்துத் தூளாய்
பிலமாக வடிகொண்டு சூர ணித்து
மணம்பெறவே பொடிபடிதா னொன்றுக் குள்ளே
வாசமாய் நாலுபடி சலத்தை வாரே. (84)

வார்த்திடுவாய் மறுநாளி லிறுத்துப் போட்டு
மறுபடியும் சலமதிலே முன்போலே விட்டு
கோர்த்திடுவா யிப்படியே பத்து வண்ணம்
கூறாகச் செய்தபின்பு சொல்லக் கேளு
பார்த்திடுவாய் புளித்ததொரு காடிக் குள்ளே
பழச்சாறு பதினாறு கொண்டு வாரே
சேர்த்திடுவாய் முன்போலே யிறுத்துப் போட்டு
திறமாக மறுபடிதான் செப்பக் கேளே. (85)

கேளப்பா புலத்தியனே சீந்தியுட கைப்பு
கேட்டதில்லை சித்தரல்லோ கெடிசெய் வோர்கள்
ஆளப்பா வாயிலிட்டா லண்டவரை மட்டும்
ஆகாகா கைப்பென்றால் வேப்பன்கா யீடோ
வாளப்பா வைத்தியர்க் கென்று சொன்னேன்
வாதிக்கல் லோவுரைத்த மார்க்க மப்பா
ஆளப்பா ஆவின்மோர் படிநா லுக்குள்
அப்பனே காற்படிதான் பழச்சா றூட்டே. (86)

பழச்சாறு விட்டபின்பு வொருநா ளெல்லாம்
பாங்காக கரைத்துவைத்து மறுநாள் கேளு
பழச்சாறு விட்டமோ ரிறுத்துப் போடு
பாலாவின் பால்படிக்குள் பொடிதான் போடு
இழச்சதல்ல வங்காள சீனி கேளு
என்னசொல்வேன் அரைப்படிதான் சீனி போடு
தழச்சுதப்பா ரவியிலே உலர்ந்த பின்பு
தானமிர்தச் சர்க்கரையா மென்று காணே. (87)

காணப்பா யிப்படிதான் சர்க்கரையைச் சொல்லார்
கைகண்ட சித்தரென்றால் பிழைக்கச் சொல்வார்
வீணப்பா மற்றதெல்லாஞ் சர்க்கரையோ அல்ல
மீறுகின்ற கைப்பதனை யடக்க மாட்டார்
தோணப்பா சர்க்கரையை வாயிற் போட
சுருக்கடா அத்திசுர மெல்லாம் போகும்
பூணப்பா யிதனோடே மருந்து கூட்ட
புகலுவேன் புலத்தியனே கேளு கேளே. (88)

## மேக சலத்துக்கு லேகியம்

கேளப்பா திரிகடுகு மதுரம் ஓமம்
கெடியான வாய்விளங்கம் நறுக்கு மூலம்
கேளப்பா கர்ப்பூரங் குங்கு மப்பூ
கிராம்புடனே சீரகஞ்கோ ரோசனைகத் தூரி
கேளப்பா சாதிக்காய் சாதிப் பத்திரி
கிருபையுடன் வகைக்கொன்று பலந்தா னொன்று
கேளப்பா யிளவறுப்பாய்ச் சூர ணித்து
கிருபையுடன் சொல்லக்கேள் கூவிளத்தின் பூவே. (89)

பூவதனை நிழலுலர்த்திச் சூர ணித்துப்
பூட்டடா சமனாகச் சீனி காலாய்
பூவதனைச் சேகரித்த சூர ணந்தான்
புகழமிர்த சர்க்கரைக்கு நாலுக் கொன்றாய்

பாவுதனைக் கலந்துகொண்டு பதனம் பண்ணு
படுபாவி மேகசலம் பறந்து போகும்
ஆவலுற லேகியமாய்ச் செய்யக் கேளு
அப்பனே தாழைவிழுதுச் சாற்றை வாங்கே. (90)

வாங்கியே படிநாலு புதுச்சட் டிக்குள்
வாரப்பா இளநீரும் படிதான் நாலு
தேங்கியே யிரண்டுமொன்றாய்க் கசாயஞ் செய்ய
செப்புவேன் குருவிச்சி பலந்தா னொன்று
ஓங்கியே சிறுபுடிக்கால் பலந்தா னொன்று
உத்தமனே யிஞ்சியது பலந்தா னொன்று
தாங்கியே நன்னாரி பலந்தா னொன்று
சாதகமா யேலமது பலந்தா னொன்றே. (91)

ஒன்றாக யிதுவெல்லா மிடித்துப் போட்டு
ஒருபடியாய்க் குறுகினபின் னதிலே கேளு
நன்றான சீனிபலம் நாலு போடு
ரசபாகு வருநேரந் தன்னி லேதான்
வென்றதொரு அமிர்தசஞ் சீவி தன்னை
மேவியரை படியளந்து அதிலே போடு
கன்றான ஆவின்நெய் படிகால் வாரு
கலங்காதே நெய்பாதி தேனைக் கொட்டே. (92)

கொட்டுவாய் மெழுகுபதந் தன்னி லேதான்
கூறாகப் பீங்கானில் வழித்து வைப்பாய்
வெட்டினேன் தேகத்துள நோய்க ளெல்லாம்
விடையமிட்டு விடையமிட்டு சோதித் தேதான்
அட்டியாய்க் கொல்வதிந்த அமிர்த லேகியம்
அப்பனே ஆருக்குஞ் சொல்ல வில்லை
மட்டில்லா வைத்தியந்தான் சாத்திரமுஞ் சொன்னேன்
மார்க்கமில்லை சூத்திரத்துக் கொவ்வா வாறே. (93)

ஒவ்வாத லேகியத்தைக் கழஞ்சு தூக்கி
உத்தமனே அப்பிரகச் சிந்தூ ரத்தைச்
செவ்வாகக் குன்றியெடை திறமாய்க் கொள்ளு
தேகத்தில் மேகசுரம் மேக வெட்டை
கவ்வாக அத்திசுரம் வெட்டை போகும்
கபாலத்தில் வெட்டைசுரங் குட்டம் போகும்
இவ்வகைதான் பத்துநாள் கொள்ளும் போது
எமனாலும் வெல்லரிது தேகந் தானே (94)

## கருநாகச் சிந்தூரம்

தானென்ற கருநாகச் சிந்தூரங் கேளு
சார்வான வங்கமது பலந்தா னொன்று
கானென்ற நற்பவளம் பலந்தா னொன்று
கைமுறையாய்ச் சிலாசத்து பலந்தா னொன்று
வேனென்ற பழச்சாறால் மூன்று நாள்தான்
விடிகாலை மாலையிரண்டு சாம மாட்டி
கோனென்ற வில்லைசெய்து ரவியிற் போடு
குறுகியே உலர்ந்தபின்பு புடத்தைப் போடே. (95)

போட்டெடுத்து நாலிலொன்று கந்தி கூட்டிப்
புகழாகப் பொற்றாலையின் சாற்றா லாட்டி
மீட்டெடுத்து வில்லைசெய்து உலர்ந்த பின்பு
வெகுசுருக்காய் அன்பதெரு புடத்தைப் போடு
மூட்டெடுத்த கருவங்கச் சிந்தூ ரந்தான்
மோசமில்லை முக்காலும் புடத்தைப் போடு
சூட்டெடுத்துப் பொடிசெய்து பதனம் பண்ணு
துடியாகக் குன்றியெடை கொள்ளு கொள்ளே. (96)

கொள்ளடா அமிர்தசஞ் சீவி தன்னில்
கொண்டபின்பு சலக்கழிச்சல் கடுப்பு ரத்தம்
விள்ளடா குறியெரிப்பு லிங்கப் புற்று
மேகத்தா லெழுந்ததொரு தோட மெல்லாம்

எள்ளடா அணுவளவு கற்பத் தாலே
எழுந்ததொரு மேகசலம் பறந்த தப்பா
தள்ளடா எமனாளை வாசி கொண்டு
சாற்றடா மண்டலத்திற் சித்தி யாமே. (97)

## வீரரச அயச் சிந்தூரம்

ஆமப்பா அயப்பொடிதான் பலந்தா னொன்று
அப்பனே அந்தயெடைக்குச் சூதங் கூட்டி
வேமப்பா கல்வத்தி லாட்டு ஆட்டு
வீரமொடு நவச்சாரம் பலந்தா னொன்று
வாமப்பா மூன்றுநாள் கைவி டாமல்
மாட்டியரைப் பொடியாகச் சிவந்து போகும்
ஓமப்பா புதுச்சட்டி யடுப்பில் வைத்து
மோசங்கள் வாராமல் வறுத்தி டாயே. (98)

வறுக்கயிலே பதம்பாரு முருக்கம்பூப் போல
வர்ணமிட்ட பதத்தோடே கருதாமல் வாங்கு
நிறுக்கயிலே குன்றியெடை பனைவெல் லத்தில்
நேசமாய்க் கொண்டிடவே சூலை வாங்கும்
உறுக்கயிலே யதன்சுறுக்கு எதுக்கு மில்லை
ஓகோகோ குட்டமெல்லா மொழிந்து போகும்
மறுக்கயிலே குன்மமென்ற தெல்லாம் போகும்
வாதநீர் விடகடிகள் வாங்கிப் போமே. (99)

## துருசு சிந்தூரம்

வாங்கிபோந் துருசுசிந் தூரங் கேளு
வாகான அரப்பொடிதான் பலந்தா னொன்று
தேங்கிப்போங் கந்தகமோ பலந்தா னொன்று
திறமாக மாய்ந்தபின்பு சொல்லக் கேளு
தாங்கிப்போந் துருசியது பலந்தா னொன்று
சாதகமாய்ப் பழச்சாற்றால் தினமிரண் டாட்டு
ஓங்கியதோர் வீரமது கழஞ்சு வொன்று
உத்தமனே அரைத்ததனை வில்லை கட்டே. (100)

கட்டியே ரவிதனிலே காய்ந்த பின்பு
கனவுடமே போடப்பா மயங்க வேண்டாம்
உட்டியே ஆறின சிந்தூ ரந்தான்
உண்மையாய்க் குன்றியெடை திரிகடுகு கூட்டி
அட்டியாய் மண்டலந்தான் கொள்ளும் போது
ஆச்சரிய குணமென்ற தெல்லாம் போகும்
சுட்டியே கற்பத்தின் தோடம் போகும்
துடியான கிராணியெல்லாம் சூட்டப் போமே. (101)

## அரப்பொடி சிந்தூரம்

சூட்டப்பா அரப்பொடிதான் பலந்தா னொன்று
துடியான கந்தகந்தான் பலந்தா னொன்று
மூட்டப்பா லிங்கமொடு கார சாரம்
முனையான உப்பிரண்டு சூடன் சீனம்
ஆட்டப்பா வகையொன்று கழஞ்சு வொன்று
ஆதியென்ற பூவதிலே கழஞ்சு வொன்று
மாட்டப்பா காந்தமது பலங்கால் கூட்டி
வளமான பழச்சாற்றா லரைத்தி டாயே. (102)

அரைத்திடுவா யிரண்டுநாள் கைவி டாமல்
அப்பனே உலர்ந்தபின்பு வில்லை தன்னை
விரைத்திடுவாய் வராகபுட மாறிப் பின்பு
விளங்கியதோர் முருக்கம்பூப் போலாம் வில்லை
நிரைத்திதனைப் பொடிசெய்து பதனம் பண்ணு
நிலையில்லாப் பாவியென்ற பாண்டு ரோகம்
கரைத்தடுக்க வொட்டாது கடலே புக்கும்
கைகண்ட சிந்தூரங் கண்டு கொள்ளே. (103)

## பாண்டுக்கு லேகியம்

கண்டுகொள்ளும் ஆவின்பால் படிதா னொன்று
கச்சோலம் நன்னாரி விலாமிச் சம்வேர்
விண்டுகொள்ளுங் கீழ்க்காய் நெல்லி வேரும்
விளங்கியதோர் வகையொன்று பலந்தா னொன்று

உண்டுகொள்ளும் படியெட்டுச் சலத்தி னுள்ளே
உத்தமனே போட்டுவற்றி படிதா னொன்று
மண்டுடா பாலுடனே கூட வாரு
மைந்தனே கமுகம்பூச் சாறு வாரே. (104)

வாரப்பா படியென்று பழச்சா றங்கே
வரிசையாய்ப் படியொன்றாய்க் கரியான் சாறு
சேரப்பா படியொன்று கீழ்க்காய் நெல்லி
தெளிவாகத் தனிச்சாறு படிதா னொன்று
சாரப்பா யிரண்டுபத்து பலந்தான் வெல்லம்
தான்கரைத்து பெயரிடவே பாகு சேரில்
ஏரப்பா திரிபலையுஞ் சீரகத்தி னோடு
இயல்பாக திரிகடுகு ஏலந் தானே. (105)

ஏலமில வங்கத்தோ லிலைகி ராம்பு
எவட்சாரஞ் சாதிக்காய் நறுக்கு மூலம்
வால்மிளகு வாய்விளங்கம் கோட்ட மப்பா
வகையொன்று பலமொன்று சூர ணித்து
ஆலைவாய்ச் சங்குபொடி யதிலே பாதி
அப்பனே பாகுவரும் போதிற் போடு
சாலவே ஆவின்நெய் படிதான் வாரு
தவறாமல் தேனதிலே பாதி வாரே. (106)

வார்த்திட்டு மெழுகுபத மான வாறின்
மக்களே பீங்கானில் பதனம் பண்ணு
கோர்த்திட்டு லோகசிந் தூரத் தைக்கேள்
குன்றியெடை தினமொன்றுக் கிருநே ரந்தான்
சார்த்திட்ட லேகியந்தான் கழஞ்சு யிரண்டு
சாதித்து மண்டலமே தின்பா யாகில்
ஏர்த்திட்ட தெந்தவகை பாண்டா னாலும்
இலேகியசிந் தூரத்தைக் கண்ட போதே. (107)

கண்டவுடன் பாண்டங்கே பறந்த தப்பா
காயங்கள் வெளுத்திருந்த தெங்கே போச்சு
கொண்டவுடன் புளியோடு புகையிலையு மாகா
கூடுகின்ற பெண்ணாகா வுளுந்து மாகா
பண்டுடைய பத்தியத்தை விட்டா னாகில்
படுபாவி லேகியசிந் தூரந் தானே
சண்டமாரு தம்போலே மெய்ப முத்து
சண்ணுமடா மாற்றுமருந்து மில்லை தானே. (108)

## மண்டூரச் சிந்தூரம் லேகியம்

இல்லையென்று போகாமல் சொல்லக் கேளு
எலுமிச்சம் பழம்பத்து நாலாய்க் கீறி
தொல்லையென்று போகாதே அயச்சிந் தூரம்
தூக்கடா பலங்கால்தான் மண்டூ ரத்தை
செல்லவே சமனாகக் கந்தி கூட்டித்
திறமாகப் பழச்சாற்றா லிரண்டு சாமம்
அல்லவே அரைத்துவில்லை யுலர்ந்த பின்பு
அப்பனே வராகபுட மான பின்பு
வல்லதொரு சிந்தூரங் காற்பலமே தூக்கி
வகையான இந்துப்பு கழஞ்சுரெண்டு கூட்டே. (109)

கூட்டியே முன்மருந்து மொன்றாய்ச் சேர்த்து
கொட்டுநீ சீரகமோர் கழஞ்சு கூட்டு
நாட்டியே பழத்துக்குள் சேர யிட்டு
நலமாகக் கரியான்சாறு நாழி விட்டு
மூட்டியே சாரணைச் சாறு நாழி
முழுகின்ற செருப்படியின் சாறு நாழி
தாட்டிகமாய் மூன்றுமொக்கச் சேர வார்த்து
சட்டியிலே பழத்தையெல்லாம் பதித்து வையே. (110)

பதித்துவைத்துத் தீயெரித்து அவித்துக் கொண்டு
பாங்கான பக்குவத்தில் புதுப்பாண் டத்தில்
பதித்துவைத்து நெற்குழியில் பத்து நாள்வை
பசுவினுட கொட்டத்தில் பத்து நாள்வை
பதித்துவைத்த பழந்தன்னைத் தினமொன் றாகப்
பத்துநாள் கொள்ளப்பா பாண்டு போகும்
பதித்திருந்த வாதநீர்ப் பாண்டா னாலும்
பறக்குமடா பறக்குமடா பண்டெல் லாமே. (111)

## கந்தக ரசாயனம்

எல்லாரும் வைத்தியன்போல் நோவு பார்த்தால்
இளைச்சதுவோ நோய்பார்ப்ப தென்னை மாண்பர்
வல்லாரும் வாதிமகன் வைத்திய னாவன்
மற்றவர்கள் நோயறியா மட்டை யப்பா
கொல்லாமற் கொல்லுமடா கந்த கத்தை
கூட்டுவாய் சமனின்ற விடந்தீஞ் சானை
கல்லான கந்தகந்தான் சாம மொன்று
காணப்பா அரைத்துவில்லை கட்டிப் போடே. (112)

கட்டுமடா அஞ்செருவிற் புடத்தைப் போடு
கலங்காதே கந்தகத்தை யென்ன சொல்வேன்
வெட்டுமடா குட்டமொடு கிரந்தி சூலை
வெல்லுமடா சூதபற்பங் கூட்டித் தின்று
பட்டுவிடும் மேகநீர் மேக சூலை
பறக்குமடா மேகத்தி னெழுந்த வாய்வு
திட்டமடா பத்துநாள் கொள்ளும் போது
சித்தியடா கற்பத்துக் குறுதி காணே. (113)

## வெண்கலச் சிந்தூரம்

உறுதியென்ற வெண்கலச்சிந் தூரங் கேளு
உத்தமனே வெண்கலந்தான் பலந்தா னொன்று
அறுதியென்ற சிலாசத்து பலந்தா னொன்று
அண்டத்தோல் பலமொன்று குடிலமொரு பலந்தான்

விறுதியென்ற வீரமது பலந்தா னிரண்டு
வீரான தாளகந்தான் பலந்தா னிரண்டு
பொறுதியென்ற கந்தகந்தான் பலந்தா னாறு
போட்டரைப்பாய் கல்வத்தில் பழச்சாற் றாலே. (114)

பழச்சாறு விட்டரைப்பாய் மூன்று நாள்தான்
பாங்காக வில்லைசெய்து ரவியிற் காய்ந்தால்
வழைச்சல்லோ போட்டுதடா மாட்டிக் கொண்டு
வராகபுட மானதிலே சிந்தூ ரந்தான்
இழைச்சதல்ல வெல்லத்திற் குன்றி கொள்ளு
என்னசொல்வேன் குன்மங்க ளெட்டுந் தீரும்
தழைச்சிருந்த மேகத்தா லெழுந்த தெல்லாந்
தவறுண்டே போகுமடா சார்ந்து பாரே. (115)

## முத்துமணிச் சிந்தூரம்

பாரப்பா முத்துமணி பலந்தா னொன்று
பதைப்படங்கா நாகமது பலந்தானொன்று
சேரப்பா சூதமது பலந்தா னொன்று
சிறப்பான வீரமொரு பலந்தா னொன்று
வாரப்பா முலைப்பாலி லரைப்பா யோர்நாள்
வாகாக வில்லைசெய்து ரவியிற் போடு
வேரப்பா பூக்கழஞ்சு கந்த கந்தான்
விளங்கவே யிரண்டுபலங் கூட்டி யாடே. (116)

ஆட்டியே புடம்போடு கோழி யப்பா
அரகரா முத்துமணிச் சிந்தூ ரந்தான்
நாட்டவே கிரந்தியுறு யோனிப் புற்று
நல்லதொரு லிங்கப்புற்று கண்ட மாலை
மூட்டவே மூலங்கள் பிளவையரை யாப்பு
மூக்கினுள்ளே தசைக்குத்தல் பீனி சங்கள்
காட்டவே சிந்தூரங் கண்ட போதிற்
காணப்பா நடுநடுங்கி யோடுந் தானே. (117)

## தாளக சலம்

தானான தாளகந்தான் பலந்தா னொன்று
சம்பழச்சாறு படியொன்று சுருக்குப் போட்டு
வேனான முலைப்பால்கரற் படியே தாக்கு
விளங்கவே யூறலறும் பின்பு கேளு
வானான திருகுகள்ளிப் பால்தான் நாழி
வாங்கியதில் ஊறப்போடு மருந்து கேளு
கோனான திருகுகள்ளி யுப்புப் பூவும்
கொடியநவச் சாரமொடு வீரந் தானே. (118)

வீரபூ ரத்துடனே வெடியுப்புச் சீனம்
விளங்கவே வகையொன்று கழஞ்சு வொன்று
சேரவே பொடித்ததிந்த பாலிற் போடு
சிறப்பாக மூன்றுநாள் சலம தாகும்
நீராலே தாளகத்திற் காரங் கால்தான்
நிறுத்திவிடு முன்சொன்ன பலவீ தத்திற்
சாரமது காற்பலந்தான் கூட்டிக் கொண்டு
சாகவே அரைத்திடுவாய் மூன்று நாளே. (119)

## தாமிரச் சிந்தூரம்

நாள்மூன்று அரைத்துவில்லை பணம்போல் தட்டி
நலமாகச் சுத்திசெய்வாய் தாம்பி ரத்தை
கோள்மூன்றாற் தீருமப்பா ஊறல் வாங்க
கூறுவேன்அண் டத்தோல்ப லந்தா னொன்று
கேள்மஞ்சள் கட்டான வளைய லோடு
கெடியான வெடியுப்புக் கார சாரம்
பாள்காணாப் பூவீரம் பூரஞ் சீனம்
பாங்காக வகையொன்று கழஞ்சு ரெண்டே. (120)

இரண்டுடனே அண்டோடுங் கூட்டிக் கொண்டு
நிறைவாகப் பழச்சாறு அரைப்படிவிட் டாட்டிக்
கொண்டுடனே வில்லைசெய்து உலர்த்திக் கொண்டு
கொடுத்திடுவாய் ஒவ்வொத ராசிக் கேதான்

பண்டுடனே தாமிரமது பலந்தா னஞ்சில்
பாங்காகக் குகைக்குள்ளே உருகும் போது
தண்டுடனே தாமிரத்தில் பலத்த சுத்தி
சண்டாள ஊறலறுந் தாமிரந் தானே. (121)

தானன்றாய்ச் சுத்திசெய்து தாமிரந் தன்னை
தடையறவே மறுகுகையி லுருகும் போது
ஏனென்ற தாளகத்தின் மெழுகு வில்லை
ஈர்ந்திடுவாய் வொவ்வொன்றாய்க் கொடுத்த பின்பு
தேனென்ற நிறம்போச்சு வெண்கலம்போ லாச்சு
திடமாக வடித்துடனே தகர்ந்து தூளாம்
பானென்ற கல்வத்திற் பொடித்துக் கொண்டு
பாங்காகக் கண்டெடைக்குச் சூதம் வாரே. (122)

சூதத்தி னெடைபோடு வீரந் தன்னை
துடியாக முலைப்பாலி லரைத்த பின்பு
நாதமென்ற பூநீறு யிரண்டுபத்துக் கொன்று
நாட்டியரை மூன்றுநா ளானபின் கேளு
பாதமென்ற வாலைரச மட்டை போலாம்
பண்பாகக் கண்டெடைக்கு கந்தி கூட்டி
நீதமென்ற பொற்றலையின் சாற்றா லாட்டி
நிலைத்திடுவாய் அம்பதெரு புடத்திற் போடே. (123)

புடத்திலே யிருந்துரைத்த சிந்தூ ரந்தான்
பேசாதே வயிரவற்குப் பூசை பண்ணு
திடத்திலே தாம்பிரத்தின் சிந்தூ ரத்தைத்
தினங்குன்றிப் பிரமாணந் திரிகடுகு சேர்த்து
நடத்திலே மண்டலந்தா னுண்ணும் போது
நாணுங்காண் பீலிகையுங் குன்மத் தோடு
சடத்திலே யுண்டான கனப்பு வாய்வு
சாங்கமாய்த் தீருமடா தாமிரந் தானே. (124)

## நவசிந்தாமணி லேகியம்

தாம்பிரச்சிந் தூரத்தைத் தின்னும் போது
தட்டுண்ட குன்மம்போம் அநுபா னங்கேள்
காம்பியே புளித்திருந்த காடிபடி யொன்று
கண்டங்கத் தரிச்சாறு படிதா னொன்று
தேம்பியதோர் திருமேனிச் சாறுபடி யொன்று
சிறுசெருப்ப டிச்சாறு படிதா னொன்று
வேம்பினுட பட்டைச்சாறு படிதா னொன்று
மேலான கையான்சாறு படிதா னொன்றே. (125)

ஒன்றான இஞ்சிச்சாறு படிதா னொன்று
உத்தமனே பசுமலையின் பட்டை தன்னை
நன்றாக யெண்படிநீர் ஒருபடியாய்க் காய்ச்சி
நலமான கசாயமது படிதா னொன்று
மன்றான பிரமிச்சாறு படிதா னொன்று
வாகாக யிதுவெல்லாந் தாழிக் குள்ளே
சென்றாட வொன்பதுசா றொன்றாய்ச் சேர்த்து
செப்பக்கேள் பனைவெல்லஞ் சேரப் போடே. (126)

போடக்கேள் மூன்றுபத்துப் பலந்தான் போடு
புகழான வெள்ளெருக்கம் வேர்பச்சைப் பட்டை
ஆடப்பர் பலமொன்று அரைத்துக் கொண்டு
அப்பனே அன்பதுகாய் கச்சல் வாங்கி
சூடப்பா நன்றாக நறுக்கித் தட்டி
சுகமாக அரைத்திடுவாய் பிசின்போ லாக
தேடப்பா யிருமருந்து சாற்றி னோடே
சேர்ந்துநீ யரைத்திடுவாய் செப்பி னேனே. (127)

செப்பினேனு னக்காகப் புலத்தியனே அய்யா
தீராத குன்மமெல்லாஞ் சேரத் தீர
செப்பினேன் சோகிநீறு பலந்தா னொன்று
திரைநுரையி னீறுபலஞ் சங்கு நீறு

செப்பினேன் பூநீறு பலமொன் றப்பா
சேரவே யிதுவெல்லாஞ் சுட்ட சுண்ணம்
செப்பினேன் திரிகடுகு வாய்வி ளங்கம்
திப்பிலிமூ லத்திினொடு சித்தி தானே. (128)

சித்திரமூ லத்தினோடு கடுகு ஓமம்
செவ்வியம்கோட் டம்மதுரஞ் சீர கந்தான்
முத்திரையாங் காயமொடு வசம்பு காந்தம்
முழுங்கவே வகையொன்று அரைப்பலமாய்ச் சேரு
சத்திளவச் சாரம்நவச் சாரஞ் சீனம்
சவுக்காரம் பொரிகார மிணங்கன் சூடன்
பத்தியாங் கொடிக்கழற்சிப் பருப்பிந் துப்புப்
பாங்காகுங் கல்லுப்புப் பாதி சேரே. (129)

பாதியாம் வகையொன்று காற்பலமாய்க் கூட்டி
பண்பாகச் சரகெல்லாஞ் சூர ணித்து
நீதியாங் கருவேம்பி னிலையை வாட்டி
நேராகச் சூரணித்து மருந்திற் சேர்த்து
சாதியாம் சாறெல்லாம் பாகு சேரில்
தக்கதொரு சூரணத்தை யதிலே போடு
கோதில்லாத் தேனுமொரு படிதான் வாரு
கூறான நெய்யுமொரு படிதான் வாரே. (130)

வாரப்பா மெழுகுபத மான வாறே
வாய்ப்பாகப் பீங்கானில் வழித்து வைப்பாய்
சேரப்பா லேகியந்தான் கழஞ்சு அள்ளி
சிறப்பாகத் தாமிரச் சிந்தூ ரத்தை
சாரப்பா குன்றியெடை யாகக் கொள்ளு
சாந்தமாம் புகையிலையும் புளியுந் தள்ளு
வேரப்பா அட்டகுன்மம் எட்டுந் தீரும்
வெகுசுருக்கு நவசிந்தா மணியா மென்னே. (131)

நவசிந்தா மணியான லேகி யத்தை
நல்லதொரு கற்பசித்திக் காகச் சொன்னேன்
புவனங்கள் திரிந்தலையும் வைத்தியன் காண்பான்
புத்தியுள்ள வாதிமகன் குன்மந் தீர்ப்பான்
எவனாலுந் தாமிரத்தைச் செயிக்க மாட்டான்
இந்தவகை லேகியமுஞ் செய்யமாட்டான்
அவன்பிழைப்புக் கேதாலு மொன்றைச் செய்வான்
ஆகாகா வைத்திய னாமென் றோதே. (132)

ஓதினேன் தீட்சையிரு நூற்றுக் குள்ளே
உத்தமனே வடுகனுட பூசை மார்க்கம்
ஆதியாம் வைத்தியனுக் கப்பா கேளு
அவனன்றிச் சிந்தூர மாகா தொன்றும்
சாதியாஞ் சூத்திரசென் மத்தோர்க் கன்றிச்
சகலருக்கும் பலியாது தவறுண் டேபோம்
வாதியாம் மகன்தனக்கு வைத்திய னாவான்
வயிரவனைப் பூசைபண்ணி வணங்கிப் பாரே. (133)

### அயச்சிந்தூரம்

பாரப்பா அயப்பொடிதான் பலந்தா னொன்று
பரிவான காந்தமது பலந்தா னொன்று
சேரப்பா கந்தகந்தான் பலந்தா னிரண்டு
திறமான பூநீறு கழஞ்சு வொன்று
காரப்பா பழச்சாற்றா லிரண்டு சாமம்
கடுகவே அரைத்துவில்லை காய்ந்த பின்பு
மாரப்பா மறுபடிநா லிரண்டு சாமம்
அடங்கவே யரைத்துவில்லை காய்ந்த பின்பே. (134)

பின்பதனைச் சுடுசெங்கல் குகைக்குள் வைத்து
பேசாமல் மேலுமதாய் மூடிக் கொண்டு
பின்பதனைச் சீலைமண்தா னிரண்டு செய்து
பிசகாமல் முட்டளவு குழிதான் வெட்டி

அன்பதெருக் குள்ளேநீ புடத்தைப் போடு
ஆறினபின் னெடுத்துப்பார் சிந்தூர மாகும்
துன்பமது கற்பத்தால் சூடு கொண்டு
தோலோடு அத்திமுதல் கனப்பு மாமே. (135)

கனத்திருந்த நீர்த்தோடங் கபால வாய்வு
கண்புகைச்சல் காதுமந்தங் காணா தோடும்
மனத்துறவே சாதிக்காய் சாதி பத்திரி
மதுரஞ்சீ ரகமோமங் குராசானி யோடு
இனத்திருந்த வாய்விளங்கம் நறுக்கு மூலம்
ஏலமதி விடையமொடு காயஞ் சுக்கு
தனித்திருந்த திப்பிலியும் மிளகு கூட்டிச்
சதிரான அபின்கோட்டந் தானொன் றாமே. (136)

ஒன்றான மருந்தெல்லாம் வகைக்குக் கேளு
உறவாகப் பலமொன்று வறுத்துக் கொண்டு
நன்றாகச் சூரணித்துப் பின்பு கேளு
நாலுபலம் பனைவெல்ல மெள்ளிற் சேர்த்து
குன்றாம லிடித்ததனை மையாய்ச் சேர்த்து
கூட்டப்பா சூரணத்தை ரேகித் தேதான்
சென்றாமல் நறுந்தேனைக் காற்படி தான்விட்டு
சிறக்கவொரு பீங்கானி லடைத்து வையே. (137)

அடைத்துவைத்த மருந்தப்பா கழஞ்சு யிரண்டு
அயக்காந்தச் சிந்தூரங் குன்றியெடை கூட்டி
இடைந்துவிடு மண்டலந்தான் தின்னு தின்னு
எளிதல்ல ஆறுவகைக் கிராணி யெல்லாம்
சடைந்தங்கே யோடிப்போம் புவியுள் ளோர்க்குத்
தாக்கினால் புளியோடு புகையிலை யாகா
உடைந்துவிடு முதரத்தில் நின்ற வாய்வு
உகமுடிந்து போகுமடா உண்மை காணே. (138)

## வெள்ளீய ராசிச் சிந்தூரம்

காணப்பா வெள்ளீயம் ராசி நேராய்
கசகாம லுருக்கியே கல்வத் திட்டு
பூணப்பா வெடியுப்பு ரோமம் பூவும்
புகழான பலத்துக்குக் கழஞ்சு வீதம்
தோணப்பா ராசிவங்கம் பலந்தா னொன்று
துடிகொண்ட கந்தகந்தான் பலந்தா னிரண்டு
நாணப்பா பழச்சாற்றி லிரண்டு சாமம்
நன்றாக அரைத்துவைப்பாய் எருக்கம் பாலே. (139)

பாலாலே சாமமிரண்டு ஆட்டிக் கொண்டு
பதைப்படங்கா நவச்சாரம் பலமுங் கால்தான்
வாலாகப் பொற்றலையின் சாற்றா லாட்டி
மாட்டுவாய் சாமமிரண்டு மடங்கு மப்பா
சேலாக வில்லைசெய்து ரவியிற் போடு
திறமாக மூன்றுநாள் காய்ந்த பின்பு
காலாக நூறெருவிற் புடத்தைப் போடு
கைமுறையாய் ராசிவங்கங் கனகந் தானே. (104)

கனகந்தான் ராசிவங்கஞ் சிந்தூ ரத்தை
கைமுறையா யெட்டிலொன்று சூதஞ் சூட்டி
கனகந்தான் சீனியிற்கொள் தேக மப்பா
கண்துலங்குங் காற்புற்று கபால வாய்வு
கனகந்தான் அத்தியிலே பாஞ்ச வெட்டை
கசுமால குன்மமொடு கண்ட மாலை
கனகம்போ லுறைந்திருந்த நோய்க ளெல்லாம்
காணாதே கடல்புக்குங் கருத்துள் ளோர்க்கே. (141)

கருத்துறவே வாதிமகன் வைத்தியஞ் செய்தால்
கதிகெட்ட நோயாளி பணிய வேணும்
கருத்துறவே மருந்துக்குள் பற்ற வேணும்
கைமுறையாய்ச் செய்கின்ற வைத்தி யோர்க்குக்

கருத்துறவே மனதுவர நடக்க வேணும்
கழுதைபோ லிருந்தாக்காற் பலியா தொன்றும்
கருத்துறவே யிதுக்கல்லோ சித்தர் சாபம்
காட்டினார் மனதுவர நடந்து கொள்ளே. (142)

## வைத்தியர் சாபம்

நடந்துகொள்ள நோயாளி ராசா வென்றால்
நாட்டினா லவர்க்கங்கே மருந்தூ ணாது
துடந்துகொள்வே னென்றுன்னைப் பத்தி வைத்தால்
சுருக்காகத் தீருமடா சாப மேது
அடந்துபோ யவர்வாசல் காத்தா யானால்
அவருக்குக் கொஞ்சம்போ லாசாரஞ் செய்யான்
சடந்தனக்கு நோய்வந்தால் குருவே யென்பான்
சாதுரிய மாய்த்தீர்ந்தால் தம்பி யாமே. (143)

தம்பியென்பான் நோயெல்லாம் போன பின்பு
தாய்தந்தை குருவென்பான் நோய்தீரு முன்பு
வெம்பியதோர் மனமடக்கி வைத்தியனைப் போற்றி
வேண்டியுப சாரம்பின் னாகட் டென்பான்
கும்பியல்லோ கொதிக்குதே வுள்ளு நொந்து
கொண்டங்கே வைத்தியனார் சூர்மைக் கேதான்
சம்பியே முகம்வாடி சாபம் வேறோ
சாற்றினே னிதுவறிந்து மருந்து வாங்கே. (144)

வாங்கியே விசுவாச மாகக் கொண்டால்
மருந்தென்ன வைத்தியன்கை பட்டால் போதும்
ஏங்கியே திரியாதே வைத்தியர் சாபம்
ஏகிடவே சாபத்தின் நிவர்த்தி கேளு
ஓங்கியே விந்துவுடன் நாதங் கூட்டி
உறவாகச் சிங்கென்று உருலட் சந்தான்
பாங்கியோ வடுகனுட சத்தி யந்தான்
பரப்பிரமன் மாயனொடு பகரக் கேளே. (145)

## வழலைக்கு விவரம்

கேளப்பா வைத்தியந்தான் சொன்னபடி கேட்கும்
கெடியாகச் சித்தருட மறைப்பை யெல்லாம்
வாளப்பா வெளியில்விட்டேன் வைத்தியத்துக் காக
மாநிலத்தில் நோயாளி மயங்காம லைய்யா
கோளப்பா வாராமல் சாபம் போக்கக்
கூறினேன் வாதிமகன் வைத்திய னாகில்
தேளப்பா கொட்டுதல்போல் பூவின் நீறும்
சேராட்டாற் சிந்தூரஞ் சேரப் போச்சே. (146)

போச்சென்று மயங்காதே சொல்லக் கேளு
புகழான பூநீறு பலந்தா னொன்று
காச்செனவே சுத்தசலந் தன்னிற் காய்ச்சு
காய்ச்சுவது கடுவெய்யில் நீரே வற்றி
வாச்செனவே யிருக்கும்பூ மாதங் காய்ந்தால்
மகத்தான பூவப்பா யிதுவே சுத்தி
பாச்சென்ற வழலையுப்பும் அந்தச் சுத்தி
பண்ணப்பா பாரையுப்பும் அந்தப் பாங்கே. (147)

பாங்கான முப்பூவும் வெடியுப் போடு
பழிகாரச் சூடனொடு அஞ்சும் நேராய்
வா்ங்கியே கிளிஞ்சியுட சுண்ணந் தன்னை
வரிசையாய்ச் சமபாக மாக வாட்டி
தாங்கியே வெண்கருக்குள் வர்க்கம்பால் வேறாய்
சாரமாம் பழச்சாறு தான்வெவ் வேறாய்
ஓங்கியே யிருசாம மிரண்டு நீறும்
உத்தமனே யரைத்துவில்லை ரவியிற் போடே. (148)

போட்டப்பா பத்துநாள் காய்ந்த பின்பு
புகழான சுண்ணாம்பு பொடிக்குள் வைத்து
சூட்டப்பா கமலமாய்த் தீயை மூட்டு
துடியாக யிருசாமஞ் சேர்ந்து நீறும்

ஆட்டப்பா யிதனாட்டுச் சிந்தூரத் தாட்டு
அடங்காத நோய்களெல்லா மகன்று போகத்
தேட்டப்பா சிப்பியுட சுண்ணஞ் சொல்வேன்
திறமான பூநீற்றின் குருவி தாமே. (149)

குருவாகுங் கிளிஞ்சியுட சுண்ண மப்பா
கூறக்கேள் மைந்தனே சுண்ணம் பண்ண
தருவாகுங் கற்சுண்ணம் உவருங் கூட்டிச்
சாதகமாய்ச் சுத்தசலந் தன்னி லேதான்
திருவாகக் கரகத்தில் கிளிஞ்சி யிட்டு
தீயெரிப்பா யிருசாமஞ் சென்ற பின்பு
அருளான ஊமைதனைப் பேசப் பண்ணி
ஆச்சரியம் உள்மருந்து பூசக் கேளே. (150)

பூச்சப்பா வீரமொடு சூடன் சீனம்
புழுகுநவச் சாரங்கல் லுப்பி னோடு
வீச்சப்பா வகையொன்று பலந்தா னொன்று
மீறியதோர் கிளிஞ்சியது பலந்தான் பத்து
ஆச்சப்பா மருந்தெல்லா மரைக்கும் போது
அண்டத்தின் நீர்பல மிரண்டு போடு
தீச்சப்பா பழச்சாற்றி லரைத்துக் கொண்டு
சிறக்கவே யுட்பூசி புடத்திற் போடே. (151)

புடம்போடு நூறெருவிற் பலத்த சுண்ணம்
பின்பொருக்கால் வெண்கருவா லரைத்து வூது
திடமாகச் சுருக்கிட்ட சுண்ண மாக்கச்
செய்கின்ற கைமுறைக்குச் சோம்ப லாகா
நடமாட வெளுக்குமட்டும் வெண்கருவா லாட்டி
நாலாறு புடம்போடு கடிய சுண்ணம்
உடனாடு சத்துருவாம் அண்ட நீறு
உற்றதொரு கிளிஞ்சிதனை யடக்க லாச்சே. (152)

## அண்டச் சுண்ணம்

மடக்குமடா புலத்தியனே உனக்குச் சொன்னேன்
வரிசையா யண்டமது பத்து வாங்கி
கிடக்குமடா பாண்டத்துள் பீங்கான் வைத்து
கெடியாக அதிற்போட்டுப் பழத்தின் சாறு
கடக்குமடா படியொன்று வமுங்க வாறு
கடுங்காரச் சீனமது கழஞ்சு யிரண்டு
அடக்குமடா பொடிசெய்து யதிலே போடு
அஞ்சுநாள் கடுவெய்யி லண்ட நீரே. (153)

அண்டத்தின் தோடமெல்லா முறுகிச் சாற்றில்
அப்பனே உறைந்திருக்கு மெடுத்துக் கொண்டு
அண்டத்தைச் சவ்வுடனே யெரிந்து போடு
அழகான பழச்சாறுஞ் சீனத் தோடும்
பிண்டத்தைக் கொல்லுவே னென்று சொல்லி
பேரிட்டு மூன்றுநாள் ரவியில் நீறும்
அண்டத்தின் நீறுதன்னைக் கல்வத் திட்டு
அதிகாரி வர்க்கம்பால் தன்னி லாட்டே. (154)

ஆட்டுவா யொருசாமம் வில்லை செய்து
அப்பனே ரவிமுகத்தில் காய்ந்த பின்பு
மூட்டுவாய் அம்பதெரு புடத்தைப் போடு
முக்கியமாய் நீறும்பின் னெடுத்துக் கொண்டு
நாட்டுவாய் பத்திலொன்று வீரங் கூட்டி
நலமாக வெண்கருவா லரைப்பாய் சாமம்
பூட்டுவாய் வில்லைசெய்து ரவியிற் காய்ந்தால்
புடமொன்று அம்பதெருக் குள்ளே போடே. (155)

போட்டெடுத்த அண்டமது பொலிந்து நீறும்
போக்கோடே யிந்தவகை யாருஞ் சொல்லார்
தாட்டிகமா யூமைதனைச் சண்ணி நீற்றும்
சளப்பட்ட குருவல்ல அண்ட வித்தை

மாட்டவே வாதத்தி லேறுஞ் சுண்ணம்
வளமான நவச்சாரஞ் சமனாய்க் கூட்டி
மூட்டினால் நெட்டடங்கி பனியில் நீராம்
முறையோடே யேறுதற்கு முந்திக் கொல்லே. (156)

கொல்லுமடா அண்டநீராற் கோப மெத்த
கொடும்பாவி உபரசத்தி லாதிச் சுண்ணம்
கொல்லுமடா சிப்பிதன்னைக் கொன்றாற் கேளு
கூறுகின்ற சிப்பிவித்தைத் தொலையா தப்பா
கொல்லுமடா சிப்பிச்சுண் ணத்தாலே கேளு
கொத்தான சவுக்காரஞ் செய்யும் போது
கொல்லுமடா பூநீற்றை வழலை யுப்பைக்
கூசாமற் பாரையுப்பைக் கொல்லுந் தானே. (157)

தானென்ற சவுக்கார மேத்த லாச்சு
தருவாகிக் கறுத்திருந்த நெடிய சிப்பி
வானென்ற அண்டத்தில் நீராற் சிப்பி
மகத்தான சுண்ணமடா ஆதி யாதி
வேனென்ற வைத்தியத்தை விள்ளப் போய்தான்
வேரான வழலையுப்புச் சிப்பிச் சுண்ணம்
நானொன்றாய்ச் சொல்லிவிட்டே னினிப்பொய் யாது
நலமான அண்டத்தாற் சிப்பி நீற்றே. (158)

அண்டத்தாற் சிப்பிதன்னைச் சுண்ண மாக்கி
அரகரா சவுக்காரஞ் செய்வா யாகில்
தெண்டனிட்டு வாதம்வந்து முன்னே காணும்
செப்பினேன் வைத்தியனே செப்பக் கேளு
கண்டத்தொரு பூவென்பார் குருத்தா னென்பார்
கைமுறையைக் காணார்கள் கழுதை மாண்பர்
விண்டதொரு பூநீறு செய்ய மாட்டார்
விளங்கவே சொல்லிவிட்டேன் வேதை பாரே. (159)

## குரு பூநீறு

பாரப்பா சட்டைமுனி பூநீறு வித்தை
பாடினார் பூவதனைக் குருபண் ணாமல்
கூரப்பா சொல்லுகிறேன் பூநீ றாகக்
கொடியதொரு சிப்பிச்சுண்ணம் பலந்தா னொன்று
சேரப்பா சோடசத்தின் குருத்தா னன்றி
செகமறியப் பூநீறாய்ச் செப்பக் கேளும்
சாரப்பா முதல்தீட்சை பூவைக் கேளு
சாதகமாய் நாலுபலந் தாக்கி டாயே. (160)

தாக்கடா வழலையுப்புப் பாரை யுப்பும்
தன்னோடு வகையொன்று பலத்திற் பாதி
தாக்கடா உப்புக்குப் பாதி வெள்ளை
சவ்வீரம் வெள்ளைக்கு நாலி லொன்று
தாக்கடா சூடனங்கே பலமுங் கால்தான்
தயவான புழுகதிலே கழஞ்சு கூட்டு
தாக்கடா வண்டரிசி கழஞ்சு கூட்டு
சாதகமாய் மருந்தொக்க அரைக்கக் கேளே. (161)

அரைத்திடுவாய் பழச்சாற்றில் சாம மொன்று
அப்பனே வர்க்கம்பால் சாம மொன்று
அரைத்திடுவாய் வெண்கருவால் சாமமொன்று
அதியதொரு கடுங்கார மேற்ற வேண்டாம்
அரைத்திடுவாய் வில்லைசெய்து ரவியிற் போடு
அப்பனே பட்சமொன்று காய்ந்த பின்பு
பரைக்காதி சிவபூசை பாங்காய்ப் பண்ணு
பரிவாகச் சுண்ணத்தி லெரித்தி டாயே. (162)

எரித்துடுவாய் முத்தீயும் மூன்று சாமம்
என்னசொல்வே னாதிகுரு வான வாறு
தரித்திரம்போம் வாதமுள்ள சவுக்கார மென்ன
தாளிப்பார் தாளிப்பா ரென்னை வாங்கி

எரித்திடுவார் வாட்டிடுவார் வறுத்திடுவார் கோடி
இதமாகப் புடத்திலே வைப்பார் கோடி
பெருத்ததொரு வித்தையிது சித்தர்க் காகும்
பேசாதே லோகத்தோர் பிழைக்கும் வாரே. (163)

வாரான உவர்ப்பூவைக் குருவாய்ச் செய்ய
மாட்டினேன் சவுக்காரம் வழலைக் கொக்கும்
தேரான குருவினுட பூவைக் கொண்டு
செயநீராய்ச் செய்துகொண்டு உப்பைக் கட்டி
வீரான உப்பாலே சூடன் கட்டி
வேதைகண்ட மார்க்கமடா விளங்கிப் பாரே
நீரான துறைமுகமோ கோடா கோடி
நிலைத்துநின்ற கட்டணமோ கோடி யாமே. (164)

ஆமப்பா யிந்தாதி குருவி னாலே
அடங்காத தொழிலப்பா அமைக்கப் போகா
தாமப்பா சட்டைமுனி யிரண்டு காண்டம்
சாற்றியதோ ராயிரத்தில் குருப்பூ நீறு
வேமப்பா இக்குருவை வைத்துக் கொண்டு
வேருமட்டும் தாருமட்டும் வினாவி னார்கள்
சாமப்பா சரக்கெல்லாம் வேதை யோடும்
சட்டைமுனி யாயிரத்தில் சார்வு காணே. (165)

காணப்பா கைமுறைக்குச் சட்டைமுனி நாதர்
கருத்துறவே சாத்திரத்தில் காட்டி னார்கேள்
பூணப்பா யேறுதுறை கோடா கோடி
பொன்னோடு வெள்ளியத்தை யிரண்டும் நேரே
தோணப்பா தோணுமட்டும் துறையோ கோடி
சூட்டினா ரதுகண்டு தோணிப் பாரு
ஊணப்பா யிதிலிருந் துணர்ந்து பாரு
உற்றுப்பார் தவறாது ஒன்றுந் தானே. (166)

ஒன்றான வைத்தியருக்குக் குருவைச் சொன்னேன்
ஓகோகோ வாதத்தின் குருவைச் சொன்னேன்
ஒன்றான மூதண்ட லேகி யத்தை
உணர்வாகச் சொல்லிவிட்டேன் தீட்சைக் குள்ளே
ஒன்றான பூசைவிதி செய்யுங் காலம்
உறவாடும் அரைக்கழஞ்சு வுள்ளே கொள்ள
ஒன்றான நினைவாலே வொளியைக் காணும்
உற்றுப்பா ருறுதியங்கே யோடிப் பாரே. (167)

ஏறடா குளிகையிட்டு கற்பங் கொண்டு
இருக்கையிலே உடம்பசந்து பொருத்து நொந்து
தேறடா தேகமெல்லாம் வெளுப்புக் கண்டு
சிந்தையிலே துயரமதாய் தசைநீர் விம்மி
மாறடா தசைவீங்கி மயக்க மானால்
மறுபடிதான் குட்டநீர் மாறிப் போக
வீறடா சொல்லுகிறேன் சாதி லிங்கம்
விளங்கவே பலமொன்று வாங்கு வாங்கே. (168)

## வாலை ரச சிந்தூரம்

வாங்கிடுவாய் அயப்பொடிதான் பலந்தா னொன்று
வளமான வீரம்பூரம் கார சாரம்
தாங்கிடுவாய் வகையொன்று பலங்கால் வீதம்
சாதிலிங்கத் தெடைபோடு தார சிங்கி
ஓங்கிடுவாய் கழஞ்சுவொன்று சூதங் கூட்டி
உத்தமனே பழச்சாற்றா லரைப்பா யப்பா
பாங்குடனே யிருசாம மரைத்த பின்பு
பதைப்படங்கா குகைக்குள்ளே பதித்து வையே. (169)

வையப்பா மேல்மூடி சீலை செய்து
வரிசையா யஞ்செருவிற் புடத்தைப் போடு
செய்யப்பா ஆறினபின் னெடுத்துக் கொண்டு
திரும்பவுந்தான் குகைக்குள்ளே சேர வைத்துக்

கையப்பா கருவளையல் வீரங் காரம்
கைமுறையாய்ச் சாரம்பூ நீறுங் கூட்டி
தொய்யப்பா அயகளங்கந் தனக்கு நேராய்
சூட்டியே யுருக்கிடவே சுத்த மாமே. (170)

சுத்தித்த லோகமடா ஈய மாகும்
தொடுகுறிபோற் சூதத்தைச் சரியாய்ச் சேரும்
மத்திக்கத் திரளுமடா சூதந் தானும்
மடங்காத சூதத்தை மடக்கிக் கொல்லும்
பத்திக்கும் வீரமதில் சரியாய்ச் சேரு
பாங்கான வாலரச மாகும் பாரு
அத்திக்கு முலைப்பாலா லாட்டி யாட்டி
அம்மம்மா சிந்தூர மாகக் கேளே. (171)

ஆகுமடா கந்தியது ரெட்டிப் பிட்டு
அப்பனே பொற்றலையின் சாற்றா லாட்டி
சாகுமடா மூன்றுநாள் அரைத்த பின்பு
சாற்றடா சிவக்கமட்டும் புடத்திற் போடு
பாகுபெறு குக்குடமாம் புடத்துக் கேதான்
பறக்குமடா பதினெட்டுக் குட்ட மெல்லாம்
ஏகுமடா கிரந்தியுறு சூலை மேகம்
என்னசொல்வேன் குன்றியெடை யிதமாய்க் கேளே. (172)

### துளசி லேகியம்

கொள்ளவே சொல்லுகிறேன் துளசி தன்னை
கூறாகச் சாறுபடி யொன்று வாங்கி
அள்ளவே பனைவெல்லம் பலந்தான் நாலு
அதிலிட்டுப் பாகுபெறக் காய்ச்சு காய்ச்சு
துள்ளவே திரிகடுகு மதுர மோமம்
சுருக்கான கார்கோ லரிசி கந்தி
வள்ளலே பறங்கியுட பட்டை யோடு
வாய்விளங் கங்கோட்ட வகைதா னொன்றே. (173)

வகையொன்று பலவீத மாக வாங்கி
வாகாகச் சூரணித்து பாகிற் கிண்டி
தகையான நறுநெய்தான் படிகால் விட்டுச்
சாரமுள்ள தேன்நெய்க்குப் பாதி கூட்டித்
தொகையாகு மெழுகுபதந் தன்னி லேதான்
தோன்றவே வழித்துவைப்பாய் பீங்கானுக் குள்ளே
பகையான நோய்களென்னும் பதினெட்டுக் குட்டம்
பறக்குமடா லேகியங்கண் பார்க்கு முன்னே. (174)

கண்பார்த்து வைபார்த்து முகத்தைப் பார்த்து
கண்டிதமாய் வைத்தியத்தைக் கருவாய்ப் பாகு
விண்பார்த்து மேனாள்போய்த் திரிந்தா லொன்று
மெய்ப்படா தப்பாகேள் விருது கண்டு
பண்பார்த்துப் படித்ததினால் வருவ தேது
பாசாங்காய்த் திரிந்தாக்கால் வைத்திய மாமோ
பெண்பார்த்து மோகமுற்ற பித்தாள் போலப்
பலக்கவே வைத்தியத்தைப் பலக்கப் பாரே. (175)

## உளுந்து வடை

பாரப்பா உளுந்துமா மேற்தோல் போக்கி
பாணியிலே யூறவைத்துப் பதமே யாக்கில்
சீரப்பா பருபருக்கை யாக வாட்டிச்
சிறக்கவே கரந்தையுட யிலையும் நன்றாய்க்
கூரப்பா அரைத்தபின்பு யிரண்டும் நேராய்க்
கூட்டியே ரேகித்து நறுநெய்க் குள்ளே
சேரப்பா வெந்தெடுத்து வடையைத் தின்னு
தின்றபின்பு நெய்தனையுங் குடித்தி டாயே. (176)

## வெடி பிளந்த காலுக்கு

குடித்திடுநீ யிப்படியே அஞ்சு நாள்தான்
கூறக்கேள் நாளொன்றுக் குளுந்து கேளு
திடத்துடனே படியரைக்கால் மூலி நேராய்த்
தின்றிடவே சொன்னேன்கேள் திறத்தைப் பாரு
வெடிபிளந்த காலுக்குச் சிப்பிச் சுண்ணம்
விளக்கெண்ணெய் நெய்யுடனே நெல்லிக் காயும்
அடிக்குதியி லரைத்துநீ பூசிப் பாரு
அப்பனே மண்டலத்தில் கமல மாமே. (177)

## நாக சிந்தூரம்

ஆமடா நாகத்தின் சிந்தூ ரங்கேள்
அப்பனே நாகமது பலந்தா னொன்று
சாமடா குகைதனிலே உருகும் போது
தாக்கடா மனோசிலைதான் பலந்தா னொன்று
வேமடா வெண்கொழிஞ்சி வேராற் கிண்டி
மீறவே நீறிப்போம் மூலிவேக மாறி
நாமடா கல்வத்தில் கொட்டிக் கொண்டு
ரசமதிலே பலமொன்று வாரு வாரே. (178)

வாரப்பா கல்வத்தில் கூட்டி யாட்டி
மாய்ந்தபின்பு வீரமது பலந்தா னொன்று
சேரப்பா முலைப்பாலா லாட்டி யாட்டு
திறமாக மூன்றுநாள் பனியிற் போடு
நேரப்பா கந்தகந்தா னிரட்டிப் பிட்டு
நேர்மையாய்ப் பொற்றலையின் சாற்றா லாட்டு
பேரப்பா வில்லைசெய்து காய்ந்த பின்பு
பேதமில்லை குக்குடந்தான் புடந்தா னாறே. (179)

ஆறான புடத்துக்குப் பொற்றலையின் சாற்றால்
அரைத்தரைத்துப் புடம்போடு சிவக்கும் பாரே
பேறான நாகத்தின் சிந்தூரம் பாரு
பெருமை சொல்ல யென்னாலே முடியா தைய்யா

வாறான கற்பமது கொள்ளும் போது
வயிற்றினிலே எரிவுகண்டு சிறுநீர்க் கட்டி
தேறான காயந்தா னுலர்ந்து வற்றி
தேரைபோ லிளைத்தாற்கால் செய்யக் கேளே. (180)

செய்யென்ன வென்றாக்காற் சொல்லக் கேளு
திறமான நாகத்தின் சிந்தூ ரத்தை
மெய்யாகச் சொல்லுகிறேன் பனைவெல் லத்தில்
மெத்தவே கொள்ளாதே குன்றி கொள்ளு
சைய்யோகஞ் செய்யாதே புளியா காது
தாம்பூல மாகாது சடலந் தேற
பொய்யல்ல மூலத்திலெ டுத்த ரோகம்
போகுமடா புலத்தியனே கஞ்சா வாய்க்கே. (181)

## கஞ்சா சூரணம்

கஞ்சாவு மேலமொடு சாதிக் காயும்
கடுக்காயுஞ் சுக்குடனே வாய்வி ளங்கம்
மிஞ்சாம லோடுவடக்கிச் சூர ணந்தான்
மிளகொடு திப்பிலியும் நறுக்கு மூலம்
மஞ்சளொடு சாதிப்பத்திரி கிராம்பு ஓமம்
வரிசையாம் குராசானி சித்திர மூலம்
தஞ்சமுற வகையொன்று பலந்தா னொன்று
சாதகமாய் வறுத்துச்சூ ரணித்து வையே. (182)

சூரணந்தான் கண்டத்துக்குப் பாதி எள்ளு
சுகமாகச் சீனியது எள்ளிற் பாதி
கூறவே மருந்தெல்லா மொன்றாய்ச் சேர்க்கக்
கூர்மையாய்ச் சீனியெள்ளுந் துவைத்துக் கொண்டு
வேறேநீ மருந்துகொள்ள வேணு மோசொல்
மீறுகின்ற யிம்மருந்து கழஞ்சுக் குள்ளே
நீறான நாகத்தின் சிந்தூ ரத்தை
நிலைக்கவே மண்டலந்தான் குன்றி யுண்ணே. (183)

உண்ணவே மூலமெல்லாம் அபான னாலே
 உதானென்ற வாய்வாலே யொழிந்து போச்சு
கண்ணவே தசவாய்வு யெங்கே போச்சு
 கழிச்சலென்ற ரத்தமெல்லா மெங்கே போச்சு
அண்ணலே கிராணியெல்லா மகன்று போச்சு
 அப்பனே பதினெட்டுக் குட்டம் போச்சு
எண்ணவே அநுபான மறிந்து கொண்டால்
 எளிதல்ல பாம்பினுட விடந்தான் காணே. (184)

## காரீயச் சிந்தூரம்

விடமீறிக் கொண்டதுபோல் மெய்க்குள் ளான
 வியாதியெல்லாம் பாம்பதனைக் கண்டா லோடும்
திடமாக நாகத்தின் சிந்தூ ரத்தைச்
 செப்பிலார்கை முறையாய்ச் சேரச் சொன்னேன்
அடராது கருவங்கங் கட்டிக் கொண்டு
 அய்யய்யோ சிந்தூரம் யார்தான் செய்வார்
படரான கருவங்கஞ் செத்து தானால்
 பரியைமுந்திக் கொல்லுமடா பாரு பாரே. (185)

கொல்லுமே வங்கத்தைக் கொல்லும் கொல்லும்
 கொடிதான சூதமது பலந்தா னொன்று
சொல்லுமே கந்திரசந் தனக்குப் பாதி
 சேரப்பா எட்டிலொன்று காரங் கூட்டி
வல்லதொரு மிளகுத்தக் காளிச் சாற்றால்
 வாகாக யிருசாம மரைத்துக் கொண்டு
அல்லவே பூநீறு கழஞ்சு கூட்டி
 ஆகாகா கருவங்கம் பலந்தா னிரண்டே. (186)

இரண்டான வங்கமது உருகும் போது
 நிசமாகப் பணம்போலே வில்லை காய்ந்தால்
திண்டாட வொவ்வொன்றாய்க் கொடுக்க வாங்கும்
 சிறப்பான மருந்தெல்லாம் தின்றால் வங்கம்

கண்டதுண்டோ கண்ணுள்ளே யிந்தக் கட்டு
கனகமடா வங்கமது உருக்கிப் பாரு
திண்டாடுங் கண்விட்டு கரியி னுள்ளே
சீரணித்துப் போகாது கவுரி கூட்டே. (187)

கூட்டப்பா சூதத்திற் பாதி சேர்த்து
கொட்டடா திரிவங்கங் கட்டிப் போச்சு
மூட்டப்பா கண்டெடைக்குத் தாள கத்தை
முடுகுபெறச் சுத்திசெய்து யெடுத்துக் கொண்டு
காட்டப்பா வங்கமது வுருகும் போது
கட்டியமால் தேவிதனைப் பொடித்துத் தூவி
பூட்டப்பா நாயுருவிக் காம்பால் கிண்டு
புகழான கருவங்கம் பொலிந்த நீரே. (188)

பொலிந்துநீர் கல்வத்திற் பொடிக்கத் தூளாம்
பூநாக மெட்டிலொன் றுலர்த்திப் போடு
மெலிந்துவிடும் வங்கத்திற் பாதி சூதம்
வீரமது வங்கத்திற் சமனாய்ச் சேரு
மலிந்துதப்பா வாலைரசம் முலைப்பா லூட்டி
வாகாக ஆட்டியே பனியிற் போடு
நலிந்துவிடும் பின்பதிலே கந்தி தன்னை
யிரட்டிப்புச் சேர்த்துநீ நாட்டி டாயே. (189)

நாட்டினார் பொற்றலையின் சாற்றா லாட்டி
நாலாம்நாள் வில்லைசெய்து ரவியிற் போடு
ஓட்டிலே வைத்திதனை யோடு மூடி
உறவாகச் சீலைசெய்து காய வைத்து
தாட்டிகமாய் அஞ்செருவிற் புடத்தைப் போடு
சாதகமா யஞ்சுதரஞ் சாற்றா லாட்டி
மூட்டியே கைமுறையாய்ப் புடத்தைப் போடு
மூதண்ட வங்கமது முருக்கம் பூவே. (190)

முருக்கம்பூ நிறமென்ன யொப்போ வல்ல
முக்கியமடா சிந்தூரம் பனைவெல் லத்தில்
திருக்கரவே குன்றிகொள்ளு மண்ட லந்தான்
திரிகடுகு மதுரமொடு சீரகமுங் கூட்டி
உருக்கமுடன் பாத்திரத்தில் வைத்துக் கொண்டால்
ஓடுமடா மேகமெல்லா மொழிந்து போச்சு
பெருக்கமுடன் வாய்வெல்லா மெங்கே போச்சு
பித்தமுடன் குட்டமெல்லா மொழிந்து போச்சே. (191)

போச்சடா கிரந்தியொடு சூலை தாகம்
புணர்ச்சியுறு விந்துவிலே சேர்ந்த வாய்வு
போச்சடா உதரத்தி லுள்ளவாய்வு போகும்
பொருமலுடன் மேலேப்பம் புழுக்கள் மூலம்
போச்சடா சூசிகா வாய்வு குன்மம்
பூரணத்தைக் கொல்லவந்த சயரோ கங்கள்
போச்சடா பீனிசங்கள் கபால ரோகம்
புத்திகெட்ட சித்தர்களே புகலக் கேளே. (192)

## பூரண சந்திரோதயம்

புகலக்கேள் வங்கமது தங்க மொப்பாம்
பொய்யில்லை கட்டியதோர் கருவங் கத்தால்
அகிலமெல்லாம் படைத்தளித்த பிரமன் கூறு
ஆக்கைக்கு உறுதிமெத்த அதனாற் சொன்னேன்
பகிரண்டம் பேதிக்கும் தங்க நீறும்
பண்ணுவது வங்கத்தால் பரிந்து காணு
செகமெல்லாங் கொள்ளாது தங்க பற்பம்
செப்புகிறேன் புலத்தியனே சேரக் காணே. (193)

காணப்பா தங்கமது பலந்தா னொன்று
கடியதொரு குகைதனிலே யுருகும் போது
தோணப்பா சூதமொடு தார சிங்கி
சுத்தித்த வெள்ளீயம் சாதி லிங்கம்

பேணப்பா அரிதாரம் நிமிளை வீரம்
பேரான வெண்கார மெட்டுங் கூட்டி
பூணப்பா வகையொன்று பலமுங் கால்தான்
புகழான பழச்சாற்றா லரைத்துக் கூட்டே. (194)

அரைத்திடுவாய் சாமமொன்று அப்பா கேளு
ஆகாகா பூநீறு சாறுங் கூட்டி
வரைக்கடங்கா நீராகும் பூரம் வீரம்
மாட்டுவா யிருசாம மரைத்துக் கொண்டு
நிரைக்கவே குன்றியெடை வில்லை காய்நீதால்
நேராக வொவ்வொன்றாய்க் கொடுக்க வாங்கும்
தரைக்கடங்காத் தங்கமது மருந்தெல்லா முண்டால்
சாதகமாய்த் தங்கத்தின் களங்கம் போக்கே. (195)

களங்கம்போ லிருக்கின்ற தங்கந் தன்னைக்
கருவளையல் வீரமொடு கார சாரம்
வளங்கவே பழச்சாற்றி லரைத்துக் கூட்டி
வாகாகச் சோதித்துப் பின்பு கேளு
விளங்கொண்ட ஈயமடா தங்கந் தானும்
வேதையிதிற் சொல்வதற்கு நாவே றாது
உளம்பெறவே சூதத்தைச் சரியா பூட்டி
உத்தமனே வீரத்தை யொன்றாய்த் தாக்கே. (196)

தாக்கடா யிரண்டுபலம் முலைப்பா லாட்டு
சாதகமாய்ப் பழச்சாறுங் கூட்டி யாட்டு
வாக்கடா யிருசாமம் அரைத்த பின்பு
வரிசையாய்க் கைமுறையாய்ப் பனியிற் போடு
போக்கடா கந்தகந்தான் யிரட்டிப் பிட்டுப்
பூரிகெடத் தாளகந்தான் நாலத் தொன்றாய்
ஆக்கடா பத்திலொன்று சிலையு மிட்டு
அப்பனே பொற்றலையின் சாற்றா லாட்டே. (197)

ஆட்டுவா யிருசாமம் வில்லை செய்து
ஆதித்த னுதித்தபின்பு குப்பிக் கேற்றி
மூட்டுவாய் மூன்றுநாள் முத்தீ யிட்டு
முழங்கவே வயிரவர்க்குப் பூசை பண்ணு
தீட்டுவாய்ச் சிந்தூரம் அருணன் போலாம்
சிறப்பான பூரணசந் திரோதை யந்தான்
நாட்டுவாய் சந்திரோதை யத்தைக் கண்டால்
நடுநடுங்கி நோயெல்லாம் கண்கா ணாதே. (198)

கண்காணா நோய்களோடும் காலன் பார்வை
கடைகெட்ட ஆங்கார முள்ளே புக்கி
விண்காண விந்தங்கே மேலே யேறும்
விருதாக மனந்தன்னை யொன்றாய்ப் பண்ணும்
உண்காண அமிர்தந்தா னுளத்திற் பாயும்
ஒன்றல்ல கற்பத்தை யுறுதி பண்ணு
பெண்காணச் சையோகம் பலத்து தென்றால்
பேசாதே கொல்லுமடா பிறநீர்க் கோவை. (199)

பிறநீரா லாம்பலொடு மகோத ரந்தான்
பெருவயிறு நீர்ச்சோபம் பித்த ரோகம்
திறமான வாதத்தா லெழுந்த ரோகம்
சிலேற்பனத்தா லெழுந்ததொரு தோடத் தோடு
அறமான பதினெட்டுச் சன்னி மூலம்
ஆகாத குன்மமொடு பீலி கைதான்
உறவான கிரந்தியொடு மேக சூலை
யோனியிற் புற்றுச்சீழ் ஒன்றில் லாதே. (200)

ஒன்றல்ல தசையிலுற்ற வாயு வாலே
உத்தமனே நரம்பிலுற்ற தோடம் போகும்
ஒன்றல்ல அபானனென்ற வாயு வாலே
ஒருகோடி நோயுண்டா மொப்பார் சொல்ல

ஒன்றல்ல வுந்தியின்கீழ் அபான னின்ற
உடலெல்லாங் கெடுப்பதற்கு ளங்கொண்டா னப்பா
ஒன்றல்ல சிவம்போக்கிச் சவமாய்ச் செய்தால்
ஓலாமுடிந்து போமூலத் தபானன் தானே. (201)

தானென்ற நோயெல்லாம் அபான னாலே
சாற்றுவது பிராணனென்ற வாயு வாலே
வானென்ற திசைபத்தும் உதான னாலே
வளர்ந்ததடா எழுவாய்வு வயிற்றிலே புக்கி
வேனென்ற நோயெல்லா மடைந்த தப்பா
மெய்விழுந்து போகுமட்டும் வீறே செய்யும்
ஏனென்ற பூரணசந் திரோதை யத்தை
எள்ளளவு உட்கொள்ள உடைந்து போச்சே. (202)

போச்சடா சீனியிலே நெய்தேன் கூட்டி
புகழான திரிகடுகு சீரகமுங் கூட்டி
போச்சடா நோயென்ற நோய்க ளெல்லாம்
புக்குமடா கடலங்கே கானமெங்கே யென்று
போச்சடா கற்பத்தால் வந்த தோடம்
போகுமடா பூரணத்தைத் தின்ற தாலே
போச்சடா கர்மங்க ளெல்லாம் பாரு
பூரணசுய மாக்கினிகு மாரன் போக்கே. (203)

### பூரண சுயமாக்கினி குமாரன்

குமாரனென்ற வெகுசுருக்காய்க் கொள்ளுகி றேன்கேள்
குற்றமெல்லாந் தீர்ந்திருந்த அயத்தின் ஈயம்
சமானமதாய்க் காந்தத்தின் ஈயந் தானும்
சரியாக வகையொன்று பலந்தா னொன்று
அமராடுந் தாளகந்தான் பலத்திற் பாதி
அப்பனே கந்தகந்தான் பலந்தா னிரண்டு
எமராய சூதமரைப் பலமுங் கூட்டி
எலுமிச்சம் பழச்சாற்றாற் சாம மாட்டே. (204)

ஆட்டுவாய் கற்றாழஞ் சாறு சாமம்
அப்பனே ராசிக்கின் ணத்தடைத்து வைத்து
மூட்டுவாய் ரவிமுகத்தில் திங்க ளொன்று
முடிந்தகுரு கழஞ்சியதில் வீரங் கூட்டி
மாட்டுவா யென்னசொல்வே னரைக்கும் போதில்
மகத்தான ரவிமுகத்தி லெல்லாம் நீறும்
சூட்டுவாய் கர்ப்பநோய் சூலை மேகம்
தொடுகுறிபோல் குன்மத்தைத் துரத்தும் பாரே. (205)

துரத்துமடா அக்கினிகு மாரன் பாஞ்சு
சொல்லின்வாய் முந்துமுன்னே துரத்தி வெட்டும்
அரத்தினிலே இரும்புபொடி யற்றாற் போலே
அறுத்துவிடுங் காரசார ராச புத்திரன்
சிரத்தினிலே வாய்வேது சலந்தா னேது
தேகத்தில் தசைகளுட வலிக ளேது
சுரத்தினிலே மாறுமுறைச் சுரங்க ளேது
துடிக்குமொரு விழிநோவு தொண்ணூற் றாரே. (206)

ஆறுவகைக் கிராணியெல்லா மகன்று போகும்
அப்பனே மகோதரத்தை யறுத்து வாங்கும்
கூறுகின்ற குறைநோவு குட்ட மெல்லாம்
குடிபோறோ மென்றுசொல்லி குமார னோடே
வேறுமொழி பேசாமல் விரைந்தங் கோடும்
வெட்டவெளி நோயெல்லாம் விழலாய்ப் போகும்
தேறுமிந்த குமாரவர்க்கு மார்க்க மில்லை
செப்பினே னிதுவறிந்து தெளிந்தி டாயே. (207)

## ஆனந்த வயிரவன்

தெளிந்திடுவா யானந்தா வயிரவன் தன்னைச்
செப்பரிது செப்புகிறேன் புலத்தியனே யப்பா
களிந்ததொரு பசுத்தழையின் பாலிற் செல்லக்
கவுரிலிங்கஞ் சிலைதாரங் காரம் நாவி

வளிந்தகந்தி வீரமொரு சிங்கி தொட்டி
வகையொன்று பலமொன்று மண்ட லந்தான்
குளிந்தகுளிப் பென்னமுரி கற்றா ழம்பால்
கொட்டியரை யெண்சாமம் ரவியிற் போடே. (208)

போடப்பா வில்லைசெய்து காய்ந்த பின்பு
புடமொன்று பத்தெருவில் மணற்குள் போடு
நீடப்பா நீறியது இடைபோ காது
நேருகின்ற துத்தமொரு பலத்தைக் கூட்டு
சூடப்பா சூதமது பலந்தா னொன்று
சூட்டியபின் குருக்கழஞ்சு தூக்கிப் போடு
ஆடப்பா யிதினாட்டு மாகா சன்னி
ஆனந்த வயிரவனால் பொன்னூ மத்தை. (209)

மத்தினுட சாற்றாலே சாம மொன்று
வாகாக மிளகுபோ லுண்டை செய்து
பெத்ததொரு சாம்பிராணி புகையிற் காட்டி
பெருமையுற்ற வெள்ளியுட சிமிழுக்குள் வைப்பாய்
சத்தியுட சாபத்தை நிவர்த்தி செய்து
சாதகமாய் வயிரவனைப் பூசை பண்ணு
முத்திபெறுங் குளிகையெல்லாம் முன்பின் பாராய்
முனையென்ற சன்னியெல்லாம் முறிந்து போமே. (210)

முறிந்துபோம் குன்மமொடு குட்ட மூலம்
மூலத்தில் கிராணியொடு ஆனந்த வாய்வு
முறிந்துவிடும் ஆனந்த வயிரவனைக் கண்டால்
மோசமடா வென்றுசொல்லி நோய்க ளெல்லாம்
முறிந்துபோம் சிந்தூர விதத்துகட் கெல்லாம்
முப்பூவின் குருவினுட மூர்க்க மப்பா
முறிந்துபோம் ரசபற்பங் கண்டா லைய்யா
மோகமாய்ச் சூதபற்பஞ் சொல்லு றேனே. (211)

### சூத பற்பம்

சொல்லுறேன் வெண்முள்ளிப் பழத்தின் சாறு
தோன்றுகண்டங் கத்திரியின் பழத்தின் சாறு
வெல்லுறேன் ஈருள்ளி காய்வெள் ளுள்ளி
விளங்கவே குறட்டையுட பழத்தின் சாறு
அல்லுறேன் வகையொன்று படியொன் றப்பா
அஞ்சுபத்துப் பலங்கந்தி கல்வத் தாட்டு
கொல்லுறே னென்றுசொல்லுங் கந்தியைத் தான்சாறு
குருவிலே கழஞ்சஞ்சு கூட்டி யாட்டே. (212)

ஆட்டுவாய் சாறெல்லாம் வற்ற வற்ற
ஆச்சரியங் காசுபோல் வில்லை செய்து
மூட்டுவாய் ரவிமுகத்தி லுலர்ந்த பின்பு
முறையோடே கைமுறையாய்த் தைலம் வாங்கு
நாட்டுவாய் சூதமொரு பலந்தான் நீயும்
நலமாகக் கல்வத்தில் வாரு வாரு
கூட்டுவாய் கந்தியுட தைல மப்பா
குறையாமற் பலமொன்று கூட வாரே. (213)

வாரப்பா குட்டித்தக் காளிச் சாறு
வகையாகப் படியொன்று மாள மாள
சேரப்பா தைலமொடு சூதந் தானும்
சேர்த்தரைக்க மாண்டுபோம் மூன்று நாளில்
கூரப்பா குகையிலிட்டுச் சீலை செய்து
குக்குடத்தில் நீறியது கொடுஞ்சூ தந்தான்
பேரப்பா யிதுக்குப்பேர் ரசகர்ப் பூரம்
பெரிதான கிரந்தியெல்லாம் பிரிந்து போமே. (214)

போமடா வாய்வென்ற தெல்லாம் போகும்
புற்றரையாப் போடுகடி தடத்தின் புற்று
ஆமடா லிங்கப்புற்று சூலை மேகம்
அளவற்ற புண்களெல்லா மகலு மப்பா

நாமடா புடஞ்செயமாய் ரசகர்ப் பூரம்
நாட்டினோ மிதுவன்றிப் பதங்கஞ் செய்வார்
தாமடா கொண்டாக்கால் வாயிற் கட்டும்
தந்தம்போம் பொருத்தெல்லாம் சாருங் காணே. (215)

## வயிர பற்பம்

காணப்பா காட்டுமல மிணங்கள் தேனிற்
கைகொண்டு மத்தித்து வயிரத் துக்குத்
தோணப்பா கவசமிட்டு புடத்தில் நீறும்
சுகமாக யுட்பூசி குருவை யப்பா
வீணப்பா வல்லவது வயிர பற்பம்
மீறவே சமனாகச் சூதங் கூட்டி
பூணப்பா சூதத்தில் பாதி வீரம்
புழுகந்த வெடைப்பாகம் வண்டு கூட்டே. (216)

வண்டரிசி சூதத்தில் பாதி கூட்டி
வளமாக விந்துவினால் மாட்டி யாட்டு
ரெண்டுநா ளரைத்தபின்பு வில்லை கட்டு
நேராக வுலர்ந்தபின்பு புடத்தில் போடு
கண்டவர்கள் வயிரத்தைப் பற்ப மாகக்
கட்டினமடா வயிரமது பற்பஞ் செய்ய
பண்டையிலே யிதனாலே பரியை நீற்றி
பரிசனத்தில் வீரமிட்டு வேதை யாமே. (217)

வேதையாந் தங்கபற்பந் தேனிற் குன்றி
வீதமடா மண்டலங்கொள் சயமெல் லாம்போம்
பாதையாம் வயிரத்தால் தங்கம் நீற்றி
பரிநீற்றித் தின்னுகின்ற மார்க்க மப்பா
பேதியாந் தேகமெல்லாம் பொன்போ லாகும்
பிள்ளைக்குச் சேனையிட்டால் பலத்த காயம்
தாதையாம் அமவிருத்துத் தட்டிப் போகும்
சகலசித்தும் கைவசமாஞ் சார்ந்து பாரே. (218)

பாரப்பா வயிரபற்பம் பனைவெல் லத்தில்
பாங்காக யிருநேரம் மண்ட லந்தான்
சாரப்பா தேகமது வச்சிர காயம்
தசைமேலே வெடித்தபுண்கள் பிளவை யோடு
தீரப்பா பவுத்திரந்தான் கண்ட மாலை
தீராத கடிவிடங்கள் குட்ட ரோகம்
பேரப்பா வயிரமென்று கேட்கு முன்பே
பின்திரும்பிப் பாராமற் பிரிந்து போமே. (219)

## பேதிக்கு லேகியம்

பிரிந்துபோம் கற்பத்தால் வந்த தோடம்
பிழைபொறுக்கு மோவயிரங் கண்ணால் பார்த்தால்
முறிந்துபோம் மலக்கட்டுக் கட்டிற் றானால்
மோசமடா மலக்கட்டுத் தீர்க்கச் சொல்வேன்
செறிந்ததிரி கடுகுரோ கணியிந் துப்பு
திரிபலை முத்தக்காசு விடைய மோமம்
அறிந்தவாய் விளங்கமொடு நறுக்கு மூலம்
அப்பனே வகையொன்று பலந்தா னொன்றே. (220)

ஒன்றப்பா நிலவாகைச் சூர ணந்தான்
உத்தமனே படியரைதா னுறவு செய்ய
நன்றப்பா மருந்துடனே யெல்லாமுந் தூளாய்
நாட்டினார் கண்டெடைக்குச் சிவதை கூட்டி
சென்றப்பா ஆமணக்கி னெண்ணெ யோடே
திறமாக லேகியம்போற் செய்து கொண்டு
வென்றப்பா வெருகடிதான் சீனி வாயில்
விழுங்குவா யினிற்போட்டு விழுங்கு வாயே. (221)

விழுங்குவாய் லேகியந்தான் கழஞ்சு யிரண்டு
மீறுகின்ற சீதமெல்லா மறுத்துண் டேபோம்
ஒழுங்கான வேப்பிலையின் கியாழத்திற் கொள்ள
உத்தமனே கிருமியெல்லா மொழிந்து போகும்

நழுங்காத குடல்வாய்வு மாண்டு போகும்
நலமான அபானவாய்க் கடுப்புத் தோன்றும்
தெழுங்காமற் சத்தியுண்டாம் நீர்த்தோ டம்போம்
தித்தைப்போற் சுகபேதி யில்லை காணே. (222)

## பஞ்சலோக சிந்தூரம்

காணப்பா கந்தகமும் லிங்கம் வீரம்
கட்டான குருவோடு கார சாரம்
பூணப்பா சிலைநாகங் கருநாக வங்கம்
புகழான வெள்ளியொடு சூதந் தாரம்
தோணப்பா தாரசிங்கி அயத்தி னோடு
துருசுபொன் னிமிளையொடு துத்தஞ் சூடன்
வேணப்பா வகையொன்று பலந்தா னொன்று
வெண்கருவர்க் கம்பால் நீர்விட் டாட்டே. (223)

ஆட்டுவாய் முச்சாம மப்பா கேளு
அப்பனே முலைப்பால்நீர் சாம மொன்று
நாட்டுவாய்ப் பழச்சாறு சாமம் நாலு
நல்லதொரு பொற்றலையின் சாற்றி னாலே
மூட்டுவா யிருசாம மரைத்த பின்பு
முனையாக வில்லைசெய்து ரவியிற் போடு
தீட்டுவா யுலர்ந்தபின்பு குகையில் வைத்து
திறமாக மேல்மூடிச் சீலை செய்யே. (224)

செய்யடா புலத்தியனே ஈசா னத்தில்
செப்பமாய் வயிரவர்க்குப் பூசை நன்றாய்ச்
செய்யடா மணவரையில் முப்பதெரு வாலே
திடமாகப் புடம்போடு மயிற்கழுத்து வர்ணம்
செய்யடா சமனாக கந்தி கூட்டி
தீர்க்கமுடன் பொற்றலையின் சாற்றா லாட்டிச்
செய்யடா வெளியிலே குக்குடமாய் முன்போல்
திடமாகச் செய்சிந்தூ ரந்தான் காணே. (225)

சிந்தூர மாகுமடா பொற்றலையின் சாற்றால்
திரும்பியொரு போதரைத்துப் புடத்திற் போடு
சிந்தூரங் கருஞ்சிவப்பா மப்பா கேளு
தேனோடே சிந்தூரங் குன்றி கொள்ளு
சிந்தூரம் அமிர்தசர்க் கரையிற் கொள்ளு
தேகத்தில் வெட்டைசுரம் சேரப் போகும்
சிந்தூர மண்டலமே தின்றா யானால்
சலதோடம் சிரதோடங் கபால வாய்வே. (226)

வாயுவினால் வந்ததொரு மேக சூலை
வலிகுன்மம் காமாலை சோகை பாண்டு
நேயமுடன் அத்திக்குள் சுரமும் போகும்
நெஞ்சுவலி தண்டெரிவு இந்திர கண்டி
ஆயுமே நாதவிந்து விழுங்கும் வாய்வு
அப்பனே புழுவெட்டு விழியில் ரோகம்
சாயுமே நாய்களெல்லாந் தரிப்பிடங் காது
தவறுண்டே போகுமடா சகல நோவே. (227)

## கந்தி அய பற்பம்

சகலவொரு நோவெல்லாந் தீர்ந்து போகும்
சாற்றுறேன் புலத்தியனே தப்பா தைய்யா
சுகமான கந்தியது பலந்தா னொன்று
சூட்டத்திலே அயப்பொடிதான் பலந்தா னொன்று
புகலாதே பழச்சாற்றா லாறு சாமம்
பூட்டியரை வெள்ளெருக்கம் பாலில் சாமம்
வகையாக யிருசாம மாட்டி வில்லை
வளமாக ரவிமுகத்தி லுலர்த்தி டாயே. (228)

## காந்த சிந்தூரம்

உலர்ந்தபின்பு முப்பதெரு புடத்தில் போடு
உத்தமனே அநுபானங் கண்டு கொள்ளு
அலந்ததொரு நோயெல்லாம் பின்வாங் கிப்போம்
அப்பனே காந்தமது பலந்தா னொன்று

பலம்பெறவே கந்தியது பலந்தா னொன்று
பாங்கான பழச்சாற்றா லாறு சாமம்
கலந்தாட்டு வர்க்கம்பா விரண்டு சாமம்
கட்டிவில்லை தான்காய்ந்தால் புடத்தில் போடே. (229)

## மண்டூரச் சிந்தூரம்

போடுவாய் முப்பதெருக் குள்ளே நீதான்
பொலிவான சிந்தூர மநுபா னத்தில்
தேடுநீ கொள்ளப்பா ரோகமெல்லாந் தீரும்
திறமாக மண்டூரச் சிந்தூ ரங்கேள்
ஆடுவா யாயிரந்தான் வருடஞ் சென்ற
அற்றதொரு மண்டூரம் பலந்தா னொன்று
கூடுவாய் கந்தியது னொன்று
கொட்டுவாய் சூதமொடு கவுரி தானே. (230)

தானென்ற சீனமொடு தாள கந்தான்
சாரமொடு வெடியுப்புச் சூடன் கூட்டிக்
கானென்ற வர்க்கம்பால் தன்னா லாட்டிக்
கல்வத்தில் பழச்சாற்றால் சாமம் ஆட்டி
வேனென்று ஆட்டியே வில்லை செய்து
விளங்கவே காய்ந்தபின்பு புடத்திற் போடு
கோனென்ற குக்குடமாம் தசமாம் முன்போற்
குறிப்புடனே அரைத்தரைத்துப் புடத்திற் போடே. (231)

## துய்யான் சிந்தூரம்

புடந்துசந்தா னற்றபின்பு மண்டூ ரந்தான்
பலத்ததொரு சிந்தூர மாகும் பாகு
திடம்பெறவே அநுபானஞ் செய்து கொண்டாற்
தேகத்தில் பாண்டுவெல்லாந் தீர்ந்து போகும்
நடம்புரிந்த லிங்கமனோ சிலைகல் நாரு
ரசவர்க்கங் கவுரிமிரு தார சிங்கி
விடம்புரிந்த வெள்ளையொடு தாள கந்தான்
மீறவே வகையொன்று பலந்தா னொன்றே. (232)

பலமான தெல்லாந்தான் சமனாய்ச் சூதம்
பாங்கான அய்ங்கோலம் நெய்விட் டாட்டி
பலமாக யிருசாம மரைத்துக் கொண்டு
பித்தளைக் கிண்ணியிற் பதங்க மேற்று
குலமான நவலோக மெல்லாஞ் சாகும்
கூறுவேனிப் பதங்கம் பலந்தா னொன்று
நலமான மூசையிலே யுருகும் போது
நல்லவெள்ளி பலமொன்று ருக்கித் தீரே. (233)

உருக்கியதோர் வெள்ளியது கல்வத் திட்டு
உத்தமனே யிரண்டுபலம் வீரங் கூட்டிப்
பெருக்கவே முலைப்பாலா லாட்டு சாமம்
பேசாமல் மூன்றுநாள் பனியிற் போடு
கருக்கான கந்தகந்தான் பலம்நா லிட்டுக்
கட்டாகப் பொற்றலையின் சாற்றா லாட்டி
உருக்கான குப்பியிலே வாலு கேந்திரம்
ஓகோகோ துய்யான்சிந் தூரந் தானே. (234)

## நவலோகச் சிந்தூரம்

தானென்ற வெண்கலமு மிந்த வீதம்
சாற்றடா சிந்தூரந் தானே யாகும்
கானென்ற நாகமொடு திராவுந் தானே
கருநாகம் பித்தளைதா மிரத்தி னோடு
ஏனென்ற யேமமோடு நவலோ கந்தான்
என்னசொல்வேன் முன்போலே யெடைதப் பாமல்
ஆனென்ற வெவ்வேறே சிந்தூர மாகும்
அளவற்ற நோயெல்லா மகன்று போமே. (235)

போமப்பா நவலோகச் சிந்தூரங் கண்டால்
பொறியான கருமாந்திர நோய்கள் போகும்
ஆமப்பா மண்டூரம் போலே யல்லோ
அப்பனே நவலோகச் சிந்தூரஞ் செய்யே

ஏமப்பா கைமுறைகள் தப்பாமற் செய்ய
எடுத்ததொரு சிந்தூர மெல்லா மாகும்
நாமப்பா நவரத்தின மந்த வீதம்
நாட்டினா லொன்பது சிந்தூரந் தானே. (236)

### மகாராச பூபதி

தானென்ற சருவாங்க மகாவீர சூரம்
சங்காரம் மகாராச பூபதியைக் கேளு
ஏனென்ற பூபதியின் பேர்கேட்கு முன்பே
எமதூதர் காதவழிக் கப்பாற் செல்வார்
வானென்ற நவலோகச் சிந்தூ ரந்தான்
வகையான நவரத்தினச் சிந்தூ ரந்தான்
ஏனென்ற வகையொன்று பலமொன் றப்பா
எடைகள்தவ றாதபடி தூக்குத் தூக்கே. (237)

தூக்கப்பா பலமொன்று சூத பற்பம்
துருசுசிந் தூரமது பலந்தா னொன்று
வாக்கப்பா மண்டூரம் பலஞ்சிந் தூரம்
வாகான காந்தபற்பம் பலந்தா னொன்று
நோக்கப்பா கந்திபற்பம் பலந்தா னொன்று
நோவதனைத் தீர்க்கின்ற தார பற்பம்
தாக்கப்பா பலமொன்று திரிகடுகு ஓமம்
சாதிக்காய் கிராம்புவாய் விளங்கங் கூட்டே. (238)

கூட்டுவாய் அதிவிடையம் நறுக்கு மூலம்
குங்குமப்பூ கத்தூரி வீரம் பூரம்
நாட்டுவாய் கோரோசனை சிவதை சூடன்
ரசவர்க்கம் அஞ்சனக்கல் லவின்க டுக்காய்
சூட்டுவாய் தான்றிக்காய் நெறிவிடம் பாடாணம்
துத்தமொடு கருநாபி கவுரி லிங்கம்
மாட்டுவாய் வகையொன்று பலங்கால் வீதம்
மைந்தனே மருந்தெல்லாம் கல்வஞ் சேரே. (239)

சேரவே யொன்றாக்கி யரைக்கச் சொல்வேன்
செம்முள்ளி தோடைவாழை கரியான் கொன்றை
ஆரையொடு வல்லாரை, வெண்கொ ழிஞ்சி
ஆவாரை முருக்கம்பூச் செம்ப ருத்தி
பாரமெனுந் தக்காளிப் பழத்தின் சாறும்
பாங்கான பொற்றலையும் பொன்னூ மத்தை
வாரமுடன் வகையொன்றால் நாளொன் றாக
மடங்கவே அரைத்திடுவாய் சாற்றி னாலே. (240)

சாற்றினாலே யரைத்துச்சேர் பயற்றின் மட்டாய்
தவறாம லுண்டைசெய்து ரவியிற் போடு
கூற்றுவனார் தேசம்விட்டு தேசம் போவார்
கூறான பூபதிதான் காயக் கண்டு
தேற்றுவார் தேசத்து மானி டர்கள்
தேகமினிப் பலத்ததென்பார் திடங்கொண் டேதான்
மாற்றினார் வியாதியெல்லாம் சித்த ரப்பா
மகத்தான பூபதியை வணங்கிச் செய்யே. (241)

## நாக பற்ப சிந்தூரம்

வணங்கிநின்ற புலத்தியனே அய்யா கேளு
வளமான நாகபற்ப மாகச் சொல்வேன்
இணங்காத நாகமது பலந்தா னொன்று
இந்தவெடைக்குச் சிலையிட்டு கொழிஞ்சி வேரால்
குணங்காமற் கிண்டிடுவாய் பற்ப மாகும்
கூறக்கேள் பின்பெடுத்து கல்வத் திட்டு
மணம்பெறவே பழச்சாற்றால் நாலு சாமம்
மடங்கவே அரைக்கையிலே மருந்து போடே. (242)

மருந்தென்ன வீரமொரு பலந்தான் போடு
வாகான லிங்கமொரு பலந்தான் போடு
பொருந்தவே சூதமொரு பலந்தான் போடு
புகழாக வில்லைசெய்து ரவியிற் போடு

திருந்தவே அஞ்செருவிற் புடத்தைப் போடு
திறமான நாகமது சிந்தூ ரந்தான்
அருந்தவே குன்றியெடை பனைவெல் லத்தில்
அப்பனே குன்மமெல்லா மகன்று பேமே. (243)

போமடா சீதரனார் கந்தி யிரண்டும்
புகழாக வகையொன்று பலந்தா னொன்று
ஆமடா பழச்சாற்றால் நாலு சாமம்
அப்பனே மறுகல்வந் தன்னில் கேளு
வேமடா அயப்பொடியுஞ் சூதஞ் சாமம்
வெவ்வேறு பலமொன்று விளங்க வேதான்
நாமடா நாலிரண்டு சாம மாட்டு
ரண்டுகல்வத் திட்டமருந் தொன்றாய்ச் சேரே. (244)

ஒன்றாக்கிப் பொற்றலையின் சாற்றா லாட்டி
உத்தமனே அறுசாமம் அரைத்த பின்பு
நன்றாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
ரசகந்தி சாரமா லிடைபோ காது
சென்றாடுஞ் சிந்தூர மென்ன சொல்வேன்
சீராகக் குன்றியெடை தேனிற் கொள்ள
குன்றாத குன்மமெட்டும் பீலிகையி னோடும்
கொழுத்தமகோ தரந்தீருங் கூறி னோனே. (245)

கூறினேன் சிலாசத்துச் சிந்தூ ரத்தைக்
குன்றியெடை யிதனோடே கூட்டிக் கொள்ள
கூறினேன் நீராம்பல் சோகை தாகம்
கொண்டசலக் கழிச்சலொடு ஈளை ரோகம்
கூறினேன் நீர்க்கடுப்புக் கல்ல டைப்பு
கொத்தமல்லி சீரகத்திற் கொண்டாற் கேளு
கூறினேன் பித்தம்நாற் பதுமே தீரும்
கொள்பிறநீர்க் கோவைகுட்டம் பதினெட் டோடே. (246)

பதினெட்டுக் குட்டமொடு குறைநோ வெல்லாம்
பறக்குமடா சிந்தூரம் மூச்சுப் பட்டால்
கெதிகெட் டோமென்றாடும் வாத மெல்லாம்
கெஞ்சவே தாண்டிக்கும் நறுக்கு மூலம்
மதிகெட் டெண்ணாதே புலத்தியனே அய்யா
வாய்விளங்கந் திரிகடுகு வோமங் காயம்
அதிவிடையம் சாரணைவேர் மருந்தோ டெல்லாம்
எவட்சாரம் பனைவெல்லம் பலந்தா னொன்றே. (247)

பலமொன்று சாரணைவேர் மருந்தோ டெல்லாம்
பரிவாகச் சூரணித்து பாங்கு கேளு
கலங்காதே திருமேனி செருப்புக் காலும்
கரியானும் வெவ்வேறு யுலர்த்தித் தூளாய்
மலங்காமல் சூரணித்துப் படிகா லப்பா
மருந்தோடே சேகரித்து நறுந்தேன் விட்டு
இலங்கவே யொருபோது கழஞ்சு உண்ண
ஏகுமடா சிலேற்பனந்தான் தொண்ணூற் றாறே. (248)

தொண்ணூற்றா றுஞ்சடத்திற் தத்து வந்தான்
சுத்தியாந் தோடமெல்லாஞ் சேர்க்கி லோடும்
கண்ணுற்ற நாடியெல்லாம் பலக்குஞ் சொன்னேன்
கைகண்ட பூரநீறு குருவாய்ச் செய்தால்
எண்ணமாய்ச் சிந்தூர மினத்துக் கெல்லாம்
இடுவதொரு பலத்துக்குக் கழஞ்சு வீதம்
உண்ணவே சிந்தூரம் பண்ணி னாக்கால்
உறுதியா மில்லாட்டா லோகம் பொய்யே. (249)

பொய்யென்று லோகந்தான் வேதாந் தத்தைப்
புக்காமல் சித்தாந்த மாக்கிக் கேட்டேன்
பொய்யென்பான் குருவறியான் சிந்தூரஞ் செய்ய
போக்கறியா னுலகத்தா னிடைபோச் சென்பான்

பொய்யென்பா னவன்வாயில் மண்ணை யள்ளிப்
போடுநீ பழஞ்செருப்பைக் கொண்டு சண்ணு
பொய்யென்பா னவன்தன்னை முன்னே வைத்துப்
பூட்டுவாய் சிந்தூரம் பூணிச் செய்யே. (250)

### சரக்கு சுத்தி

செய்யப்பா கைமுறையாய்ச் செய்து காட்டு
செய்தொழின் பாகமாய்ச் செய்யச் சொல்வேன்
வைய்யப்பா சரக்கெல்லாஞ் சுத்தி செய்து
மாட்டப்பா சுத்திசெய்யும் வகையைக் கேளு
பொய்யப்பா சொல்லவில்லை மேனிச் சாறு
புகழாகப் படியொன்று கற்றா ழம்பால்
மெய்யப்பா படியொன்று அமுரி தானும்
விளங்கவே படியொன்று பாண்டத் தூற்றே. (251)

ஊற்றுவாய் பழச்சாறு படிதா னொன்று
உத்தமனே செம்பருத்தம் பூநீ ரிட்டு
ஊற்றுவாய் ஒன்றாக்கித் தம்பலச் சாறு
ஒருபடிதான் கூடவிட்டு முலைப்பால் கேளு
ஊற்றுவாய் படிகால்தான் ரேகித் தேபின்
உரப்போடு பாரையுப்பு யிணங்க னோடு
தேற்றுவாய் காரம்பூச் சீனஞ் சாரம்
திறமாக வகையொன்று பலந்தான் காலே. (252)

காலாகப் பொடிசெய்து போட்டுக் கிண்டி
காற்றாட மூலையிலே கட்டாய் வைத்து
மேலான பாடாணம் லோகந் தொட்டு
வேண்டியதோர் சரக்கெல்லாங் கிழியாய்க் கட்டி
சேலாக ஊறல்விடும் பட்சஞ் சென்றால்
திரும்பியெடு ஆறுமாதக் காடிக் குள்ளே
மாலாகப் போட்டூற மூன்று நாள்வை
மகத்தான சுத்தியதாம் வைத்தியம் பாரே. (253)

பாரப்பா யிப்படியே சரக்குச் சுத்தி
பாங்காகச் செய்தாக்கால் சரக்கெல் லாந்தான்
காரப்பா வோடாது கடுந்தீ யாலே
கட்டாகச் சுத்திசெய்து சிந்தூ ரஞ்செய்
ஏரப்பா வைத்தியர்க்கோ சோம்ப லாகா
என்னைப்போற் சுத்திவகை யாருஞ் சொல்லார்
ஆரப்பா உனக்கீடு புலத்தியனே அய்யா
அறுபத்து நாற்சரக்கும் சுத்தி பண்ணே. (254)

## காந்தமணி சிந்தூரம்

பண்ணடா காந்தமது பலந்தா னொன்று
பாங்கான கவுரியது பலந்தா னொன்று
கண்ணடா பழச்சாற்றால் நாலு சாமம்
கட்டாக வேயரைத்து வில்லை செய்து
விண்ணடா குகையிலிட்டு காரம் போட்டு
மேலோடு மூடியே சீலை செய்து
நண்ணடா துருத்திக்கொண்டு உலையி லூது
நலமான காந்தமது மணிபோ லாமே. (255)

மணியான காந்தமணி பலந்தா னொன்று
வாகான சூதமொன்று பலங்கந்தி யிரண்டு
தணியான பொற்றலையின் சாற்றா லாட்டித்
தப்பாம லறுசாமம் வில்லை செய்து
துணிவாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
துடிகொண்டு சிந்தூர மான பின்பு
அணியாக அஞ்சுதரம் பொற்றலையின் சாற்றால்
ஆட்டிவில்லை செய்துமறு புடத்திற் போடே. (256)

போடப்பா பழச்சாற்றின் படந்தா னொன்று
புகழான காந்தமது பலந்தா னொன்று
ஆடப்பா அரிதார நீறுங் கூட்டி
அப்பனே குன்றியெடை தேனிற் கொள்ள

வாடப்பா பிளவையொடு சூலை வாய்வு
மண்டைநோ யொடுகண்ட மாலை தீரும்
சாடப்பா அரையாப்பு பவுத்திரந் தீரும்
சாற்றடா சூதபற்பந் தன்னைச் சேரே. (257)

சேரடா வொன்றாக்கித் தின்றாற் கேளு
செத்ததடா லிங்கபுற்று யோனிப் புற்று
பாரடா கிரந்தியொடு யிந்திர கண்டி
பறக்குமடா நோயெல்லாம் பாரு பாரு
சாரடா பூநாகம் பாலிற் போடு
தண்ணீர்விட் டுக்கழுவியே பாண்டத் துள்ளே
நீரடா வற்றிடவே வறுத்துப் போடு
நேசமாய்ப் பொன்னிறம்போற் பதத்தைக் காணே. (258)

காணப்பா பூநாகஞ் சூர ணித்து
கட்டாகத் திப்பிலியுஞ் சூர ணித்து
ஊணப்பா யிரண்டுமொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு
உத்தமனே நறுந்தேனிற் காசெடை யிட்டுப்
பேணப்பா தாரபற்பங் குன்றி கூட்டிப்
பலப்படவே மூன்றுநாள் கொள்ளும் போது
